2017 மார்ச் 21
செவ்வாய்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 21 · பக்கங்கள் 12 · மணி 03 · ஒளி 046

NAVAMANI DAILY · நவமணி தினபதா

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017





பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு பிரச்சினைகள் நிறைந்தது 04»



அன்ஸிலுக்கு உதித்த காலம் கடந்த ஞானம் 09»

களத்தடுப்பின் பலவீனமே தோல்விக்கு காரணம் 12»



## வெப்ப கால நிலை மே வரை தொடரும்

■ பா.மலரம்பிகை

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் சீரான காலநிலை நிலவும் என வானிலை அவதான நிலைய அதிகாரி முஹம்மத் சாலிஹீன் தெரிவித்தார்.

இருப்பினும் சப்ரகமுவ, மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, புத்தளம்

11 »»»»



# உள்ளூராட்சி தேர்தலை உடன் நடாத்துங்கள்

**அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்துடன்**


**அரசியல் அமைப்பையும் நிறைவேற்றுங்கள்**

பழைய விகிதாசார முறையிலோ, புதிய தொகுதி வாரி முறையிலோ உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்றும் புதிய அரசியலமைப்புத் திட்டம் நாட்டின் சகல அரசியல் கட்சிகளது

11 »»»»

## தம்மாலோக தேரருக்கு எதிராக பிடியாணை

உடுவே தம்மாலோக தேரரைக் கைது செய்யுமாறு, கொழும்பு மேலதிக நீதவான் துலானி அமரசிங்க பிடியாணை பிறப்பித்தார்.



11 »»»»

## நாடளாவிய ரீதியில் 50 சதொச நிலையங்கள் 28 இல் திறந்து வைப்பு

■ அ.அருண் பிரசாந்த்

இம்மாதம் 28 ஆம் திகதி நாடளாவிய ரீதியாக 50 சதோச மொத்த விற்பனை நிலையங்களை புதிதாக திறக்கவுள்ளதாக கைத்தொழில் மற்றும்

11 »»»»





## முஸ்லிம் திணைக்கள பணிப்பாளராக மலிக் பதவியேற்பில் சிக்கல்

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாராக நியமிப்பதற்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அஷ்செய்க் அப்துல் மலிக் பதவியேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அப்துல் மலிக் தற்போது பணிபுரியும் பொதுச் சேவை

11 »»»»

# பாதுகாப்பினை வலுப்படுத்துவது பற்றி

## மைத்திரி - சீன அமைச்சர் பேச்சு



இலங்கை வந்துள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரேஸ் வாங்குவாங் இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்.

தெற்காசிய நாடுகளுக்கான தனது விஜயத்தின் ஓர் அங்கமாக ஞாயிறன்று இலங்கை வந்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் நேற்றுக் காலை ஜனாதிபதியைச் சந்தித்துரையாடினார். நீண்டகாலமாக இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்கு சீன அரசு வழங்கி வரும் பயிற்சிகளுக்கும் யுத்தத்தின் போது சீனா வழங்கிய ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார். இதேநேரம் சீனப்

11 »»»»

## ஜனாதிபதி பிரதமருக்கு 17 இல் ஆஜராக பணிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை எதிர்வரும் ஜுலை 17 ஆம் திகதி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

2015 ஜனாதிபதி தேர்தலின் போது அப்போதைய எதிர்க்கட்சியின் தலைவர் ரணில்



11 »»»»

## முஸ்லிம் தனியார் சட்ட குழுவிற்கு உலமா சபையின் 9 விடயங்கள்

■ ஆதில் அலி சப்ரி

முஸ்லிம் தனியார் சட்டம், முஸ்லிம் விவாக வயதெல்லை, காதி நீதிமன்றங்கள், காதி நீதவான்கள் தரத்தை அதிகரித்தல், பலதார மணம் போன்ற ஒன்பது விடயங்கள் குறித்து முஸ்லிம் தனியார்

11 »»»»

## ஐ.நா. மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பில் நாளை விவாதம்

■ அ.அருண் பிரசாந்த்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட இலங்கை

11 »»»»

## நாச்சியாதீவில் இனவாதம் கக்கிய தேரர்கள் பொலிஸாரால் கைது

**உறுதி மொழியுடன் விடுதலை**

**பள்ளி நிர்வாகிகளிடம் மன்னிப்பு**

■ நாச்சியாதீவு பர்வீன்

நாச்சியாத்தீவு தோட்ட தக்கிய பகுதியில் இனவாதக்கருத்துக்களை வெளியிட்ட தேரர்கள் பொலிஸ் தலையீட்டால் பள்ளி நிர்வாகளிடம் மன்னிப்புக்கோரியுள்ளனர்.

நேற்று கொழும்பிலிருந்து

11 »»»»



தொலைக்காட்சி உலகின்

புதிய மாற்றம்

# தொற்றா நோய்களினாலேயே பெரும்பாலானோர் மரணிக்கின்றனர்

## சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன



(மள்வானை ஹனபி)

இன்று மரணிக்கும் எண்ணிக்கையில் பெரும்பாலானோர் மரணிப்பது தொற்றா நோயினாலேயாகும்.இதற்கு அடிப்படை காரணம் சீனி,உப்பு மற்றும் கொழுப்பு பெருமளவு அடங்கிய உணவுப் பொருட்களை அதிகளவு உட்கொள்வதாகும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சுகாதார,போஷாக்கு மற்றும் உள்நாட்டு வைத்தியத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் நோயில்லா சமூகத்தை கட்டியெழுப்புவோம் என்ற திட்டத்தின் கீழ் நடமாடும் வைத்திய முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மள்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

மள்வானை ஐக்கிய நலன்புரி இயக்கத்தினால் (அன்வோ) இவ்வைத்திய முகாம் முதற் தடவையாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.இவ்வைத்திய முகாமில் சுகாதார,போஷாக்கு மற்றும் உள்நாட்டு வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த வைத்திய முகாமை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மரணிக்கும் எண்ணிக்கையில் அதிகமானோர் தொற்றாநோயினாலே இறக்கின்றனர். இதனால் அதிலிருந்து மக்களை மீட்டெடுக்க எதிர்வரும் காலத்தில் சீனி,உப்பு மற்றும் கொழுப்பு போன்றன அதிகளவு உள்ளடங்கிய உணவுப் பொருட்களுக்கு வரியை அதிகரிக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

முற்றிலும் இலவசமாக நடாத்தப்பட்ட இவ்வைத்திய முகாமில் மேற்கத்தேய மற்றும் உள்நாட்டு வைத்திய சிகிச்சையோடு தொற்றா நோயை இனங்காணும் சிகிச்சையும் நடைபெற்றமை இங்கு விசேட அம்சமாகும். நேற்று மள்வானை 'அன்வோ' இயக்கத்தினால் நவீன மயப்படுத்தப்பட்ட அல் முபாரக் தேசிய பாடசாலை வளவுக்குள் அமைந்துள்ள பல் சிகிச்சை நிலையமும் வைபவரீதியாக அமைச்சரினால் திறந்துவைக்கப்பட்டதுடன் சுகாதார அமைச்சினால் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பற் சிகிச்சை கதிரையொன்றும் அன்பளிப்புசெய்யப்பட்டது.

இங்கு அன்வோ இயக்கத்தினால் டெங்கு நுளம்பை கட்டுப்படுத்தும் இரண்டு புகையடிக்கும் கருவிகள் பியகம சுகாதார காரியாலயத்துக்கும்,கிண்ணியா சுகாதார காரியாலயத்துக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

இத்துடன் மள்வானை பிரதேசத்திலுள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு போஷாக்கு பொதிகள் வழங்கப்பட்டதுடன் மள்வானைப் பிரதேசத்தில் வைத்திய சேவைகளை மேற்கொண்டுவரும் பியகம மற்றும் தொம்பே சுகாதார வைத்திய அதிகாரிகள் இருவர் உட்பட மள்வானைப் பிரதேசத்திலுள்ள 13 வைத்தியர்களின் சேவையை பாராட்டி விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்த வைத்திய முகாமின் ஆரம்ப நிகழ்வுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தன,கம்பஹா மாவட்ட பா.உ. சதுர சேனாரத்ன,மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.எல் பரீட், பியகம சுகாதார வைத்திய அதிகாரி குமாரி விஜேசூரிய மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# புத்தாண்டுக்கு விசேட இ.போ.ச. பஸ் சேவைகள்

( மினுவாங்கொடை நிருபர்)


எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, பயணிகளின் நன்மை கருதி, விசேட இ.போ.ச. பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளதாக, மத்திய இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்தது.

இந்த விசேட பஸ் சேவைகள், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை முதல், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடத்தப்படும் என, மத்திய இ.போ.ச. தலைவர் ரமல் சிறிவர்தன தெரிவித்தார்.

இக் காலப் பகுதியில், கொழும்பிலிருந்து தூர இடங்களுக்கான விசேட பஸ் சேவைகள் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு, வர்த்தக வலய இளைஞர் யுவதிகளின் வசதி கருதி, கட்டுநாயக்க - விமான நிலையம், பியகம, மீரிகம ஆகிய வர்த்தக வலயங்களிலிருந்தும் விசேட பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிண்ணியாவுக்கு மேலதிக வைத்தியர்கள், கழிவகற்றும் வாகனங்களை வழங்குக!

## அபிவிருத்திக்கூட்டத்தில் முதலமைச்சர் பணிப்புரை



(திருகோணமலை சஹ்ரின் இஸ்மத், அப்துல் யாசீம்)

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஷ்பகுமார தலைமையில் திருகோணமலை கச்சேரியில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவர்களான பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.மஹ்றூப் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

அத்துடன் கிழக்கு மாகாண முப்படைகளின் தளபதிகளும் இந்தக் கூட்டத்தில் பஙகேற்றிருந்தனர். குறித்த அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவில் பரவிவரும் டெங்கு நோயும் அதிகரித்துவரும் மரணங்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு அங்கு நடைமுறைப்படுத்தப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு பல தீர்வுகளும் எட்டப்பட்டன.

இதனடிப்படையில் விரைவாக இன்றிலிருந்தே நுளம்புகளைக் கட்டுப்படுத்த புகை விசுறும் கருவிகளை இயக்க பயிற்றப்பட்டவர்களை நியமிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

அத்துடன் கழிவுகளை அகற்ற முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் பணிப்பில் 10 வைத்தியர்கள் மற்றும் கழிவகற்றும் பவுசர்களும் அத்துடன் தேவையான ஏனையவற்றையும் இன்றிலிருந்து பாவனைக்காக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

# விழிப்புணர்வு பேரணி

(அஸ்லம் எஸ்.மௌலானா)

தூய அரசியலை வலியுறுத்தி 'மார்ச் 12' எனும் அமைப்பு ஒழுங்கு செய்துள்ள விழிப்புணர்வுப் பேரணி ஒன்று எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் துஷித்த பி.வணிகசிங்கவின் தலைமையில் நடைபெறவுள்ள இப்பேரணியின் இறுதியில் அம்பாறை மாவட்ட செயலக மண்டபத்தில் கூட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

பெரிய நீலாவணையில் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி கல்முனை, காரைதீவு, ஒலுவில், அக்கரைப்பற்று, இறக்காமம் ஆகிய பகுதிகள் ஊடாக அம்பாறை நகரைச் சென்றடையவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

### ஆசிரியர் பற்றாக்குறை:

# நிவர்த்தி செய்ய வேண்டுகோள்!

(கந்தளாய் எப். முபாரக்)

திருகோணமலை அபேயபுர சிங்கள ஆரம்பப் பிரிவு பாடசாலையில் காணப்படும் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி அபேயபுர சுற்றுவட்டத்தில் பெற்றோர்கள் நேற்றுக் காலை பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 308 மாணவர்கள் கல்வி கற்றுவரும் இப்பாடசாலைக்கு 8 ஆசிரியர்கள் தேவைப்படும் பட்சத்தில் தற்போது 4 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர். எனவே 4 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் கண்டி -திருகோணமலை பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை காரணமாக அவ்வீதியூடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டதுடன் வாகன நெரிசலும் ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



ஜம்இய்யதுஷ் ஷபாப் நிறுவனத்தின் அனுசரணையில், தெல்தோட்டை பிராந்திய தஃவா அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜம்இய்யதுஷ் ஷபாப் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். அப்துல் ரஷீத் (ரியாதி) கலந்து கொண்டார். அத்துடன் அத்திட்டத்தின் மூலம் எனஸல் கொல்ல புள்ளுமலை கிராம மக்கள், மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசல் மற்றும் எனஸல் கொல்ல மத்திய கல்லூரி, அல் ஹிக்மா பாலர் பாடசாலை மாணவர்கள் பயனடைவது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கலந்து கொண்ட அனுசரணை நிறுவனத்தின் பணிப்பாளர் உட்பட, பாடசாலை அதிபர் ஜி.எம். நயீமுல்லாஹ் மற்றும் ஆசிரிய குலாத்தினர், தெல்தோட்டை பிராந்திய தஃவா அமைப்பின் உறுப்பினர்கள் மாணவ மாணவிகள், கிராம மக்களையும் படங்களில் காணலாம்.

# டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம்



(அட்டாளைச்சேனை எம்.ஏ. றமீஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இதுவரை 20 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதோடு ஒருவர் மரணமடைந்ததையடுத்து தொடர்ந்து இப்பிரதேசத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் மிக மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நசீரின் ஆலோசனைக்கமைவாக நேற்று அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துடன் இணைந்து உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பொது நல அமைப்புக்கள் போன்றவற்றின் பிரதிநிதிகள் போன்றோர் இவ்வேலைத் திட்டத்தில் பங்கு கொண்டனர்.

இதற்கான ஆரம்ப நிகழ்வு அட்டாளைச்சேனை 10ஆம் பிரிவில் உள்ள மஸ்ஜிதுல் பலாஹ் முன்றலில் ஆரம்பமானது. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.அலாவுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

விழிப்புணர்வு செயற்திட்டங்கள், டெங்கின் தாக்கம் பற்றிய துண்டுப்பிரசுரங்கள் போன்றன மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டதுடன், டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை துப்பரவு செய்யாமல் வைத்திருந்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளாகி பெரும்பாலானோர் சிகிச்சை பெற்று வருவதாகவும் கடந்த ஆண்டை விட இவ்வருடம் அதிகமானோர் டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர். கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இதுவரை 773 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.எம்.அலாவுதீன் தெரிவித்தார்.

# வாசகர் கடிதம்

## சிறுத்தைகள் நடமாடுவதால் பிரதேச மக்கள் அச்சம்

(ஏ.ஏ. முனாப் - பாலாவி)

வவுனியா புளியங்குளம், பரசங்குளம் பகுதியில் சிறுத்தைகள் நடமாடுவதால் பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கையில், கடந்த ஒரு மாத காலமாக புளியங்குளம் பிரதேசத்தில் சிறுத்தைகள் நடமாடி திரிவதுடன் அச்சிறுத்தைகளால் இதுவரை மூன்று மாடுகள் கொல்லப்பட்டுள்ளன. இதனால் அப்பிரதேச மக்கள் பீதியடைந்துள்ளனர். கடந்த இரு தினங்களுக்கு முன் சிறுத்தை பசு ஒன்றை தாக்கியுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து சென்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## இஸ்லாமிய பாடத்துக்கான கல்வி நிர்வாக அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கோரல்

அஷ்ஷெய்க் என்.எம். உவைஸ் நளீமி
மன்னார்

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இலங்கை கல்வி நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்கமைய விசேட மற்றும் பொதுச் சேவைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. சேவை மூப்பு திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் மூலம் பாட ரீதியாக நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

அந்த வகையில் இஸ்லாம் பாடத்துறைக்கு வெறுமனே வெற்றிடங்களே காட்டப்பட்டிருந்தன. 24 கல்வி வலயங்களையும் 2 மாகாணக்கல்வி திணைக்களங்களையும் உள்ளடக்கிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமே இஸ்லாம் பாடத்துறைக்கு 2 அதிகாரிகள் மாத்திரமே கடமையிலுள்ளனர். இன்றும் 18க்கு மேற்பட்ட வெற்றிடங்கள் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டு தொடக்கமே நிரப்பப்படாமல் இருக்க இந்த இரண்டு நியமனங்களும் எந்த வகையில் நியாயமானது.

இதன் மிக மோசமான வெளிப்பாடுதான் கடந்த வருடம் (2015) 3 ஆம் தவணைப்பரீட்சை மன்னார் மாவட்டத்திலே இஸ்லாம் பாட வினாத்தாள் இஸ்லாத்தையே குழிதோண்டி புதைக்கும் வகையில் இழிவுபடுத்தும் அமைப்பில் தயாரிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதன் பிரதிபலிப்பு எமது இந்த தாய் நாட்டிலே உயர் சபையான பாராளுமன்றத்திலும் எதிரொலித்தது. நினைவிருக்கும் என்று நம்புகின்றோம். இஸ்லாம் பாடம் என்பது இஸ்லாமிய நாகரீகம், அறபு மொழி ஆகிய மூன்று துறைகளையும் உள்ளடக்கியது. சுமார் 756 முஸ்லிம் பாடசாலைகள் உள்ள எமது நாட்டில் 5 இலட்சத்துக்கு அதிகமான இஸ்லாம் அறபு பாடத்தை கற்கும் பாடசாலைக் கட்டமைப்பைக் கொண்ட எமது தாய் நாட்டிற்கு 2 நியமனங்கள் எந்த வகையில் நியாயமானது.

அதேபோன்று 8 கல்வி வலயங்களையும் மாகாணக்கல்வித்திணைக்களமொன்றையும் கொண்ட வடமேல் மாகாணத்திலும் இப்பாடத்துறைக்கான எந்த ஓர் அதிகாரியும் கடமையில் இல்லை என மிகக் கவலையோடு கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

இந்த விடயத்தில் கூடிய கரிசனை எடுத்து இஸ்லாம் பாடத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூகம் சார்பாக விரைவான பதிலைஎதிர்பார்த்து வேண்டி நிற்கிறோம். நல்லாட்சி அரசாங்கத்தின் புதிய எண்ணக்கருவுக்கு அமைய வலயக்கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையை 150 ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு நடைபெற்றால் நிலைமை இன்னும் மோசமாகும்.

எனவே சமூகத்தின் முக்கிய ஆளுமை என்ற வகையில் தங்களின் மேலான கவனத்தை இவ்விடயத்தில் செலுத்தி இன்னும் சில நாட்களில் வழங்கப்படவிருக்கும் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரியின் நியமனத்தின் போது மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கு தோற்றியவர்களிலிருந்து இஸ்லாம் பாடத்துறைக்கான அதிகாரிகளின் எண்ணிக்கை 10 வரையாவது அதிகரிக்க ஆவண செய்யுமாறு தங்களை தயவுடன் ஜம்மியத்துல் உலமா சபை வேண்டுகிறது.

## கிண்ணியா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை திருத்தப்படுமா?



கிண்ணியாவில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் தீவிரமாக அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் வீடுகளையும் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாக வைத்திருக்குமாறும் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நவடிக்கை எடுக்கப்படும் என ஒலிபெருக்கி மற்றும் துண்டும் பிரசுரங்கள் மூலம் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நாள்தோறும் எச்சரிக்கை விடுத்து வருகின்றது.

இது இவ்வாறு இருக்க கிண்ணியா தள வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலையின் பிற்பகுதியின் நிலை எப்படி இருக்கின்றது என்பதை இந்தப் படம் மூ லம் தெரிகிறது.

மலசலக் கழிவு நீர், சிற்றுண்டிச்சாலை கழிவு நீர் என்பன வருடக்கணக்கில் வெள்ளமாக பரவி நிற்கின்றது. இதன் அருகிலேயே வைத்தியசாலையின் உணவகமும் உள்ளது. மழை காலங்களில் இக்குட்டையில் மலக்கட்டிகள் மிதந்து வருவதாக பொதுமக்கள் கூறுகின்றனர். உயிர் காப்பகமான வைத்தியசாலை வளாகத்தில் இந்நிலையென்றால்... இதற்கு யார் பொறுப்புக் கூறுவது.

(கியாஸ் ஷாபி)

**பிரதி செவ்வாய்க்கிழமை நாட்களிலும் வாசகர் கடிதம் பிரசுரமாகும். உங்கள் பிரச்சினைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்பவும்.**

**வாசகர் கடிதம்**
**நவமணி**
**156, ஆஸ்பத்திரி வீதி,**
**தெஹிவளை.**

## சங்கிலியை கொள்ளையிட்ட இருவருக்கு துப்பாக்கி பிரயோகம்



ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின் தங்கச்சங்கிலியை கொள்ளையடித்து மோட்டார் வண்டியில் தப்பியோட எத்தனித்த இருவரை சிலாபம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு அதிகாரி துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று சிலாபம், ஆரச்சக்கட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. நடைப்பாதையில் நடந்து சென்ற குறித்த ஆயுர்வேத வைத்தியரின் தங்கச்சங்கிலியை மோட்டார் வண்டியில் வந்த இனந்தெரியாத இருவர் கொள்ளையடித்துச் சென்றனர்.

இவ்வாறு புத்தளம் நோக்கிச் சென்ற குறித்த சந்தேகநபர்களை சிலாபம் பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில், அவர்கள் அங்கிருந்து தப்பித்துள்ளனர்.

பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் பிறிதொரு யுவதி மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பின்னர் தாம் பயணித்த மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே விட்டு விட்டு சந்தேகநபர்கள் தப்பி ஓட முற்பட்டுள்ளனர். எனினும், அவர்களைத் தொடர்ந்து வந்த பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

விபத்துக்குள்ளான யுவதியை கொழும்பு வைத்தியசாலை சேர்த்துள்ளதோடு,

மேலும், தப்பியோடவிருந்த இரு சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளதோடு, இதனையடுத்து அவர்களையும் விபத்துக்குள்ளான பெண்ணையும் பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# புதிய அரசியலமைப்பு வேண்டாமென்போரிடம் ஊடகங்கள் ஏன் கேள்வியெழுப்பவில்லை?




(அஷ்ரப் ஏ சமத்)

நாட்டுக்கு புதிய அரசியலமைப்புத் திட்டம் ஒன்று தேவை என பாராளுமன்றத்தின் சகல உறுப்பினர்களும் ஏகமனதாக வாக்களித்து பிரேரணை ஒன்றை நிறைவேற்றினர். அதில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அப்டியிருக்க இன்று அரசியலமைப்புத்திட்டம் வேண்டாம். சர்வஜன வாக்கெடுப்பு வேண்டாம் என சில அரசியல்வாதிகள் கூறுவது பற்றி ஓர் ஊடகமும் கேள்வி எழுப்பாதிருப்பது ஏன்? என தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று கேள்வி எழுப்பினார்.

தேசிய ஐக்கியத்துக்கான பாக்கிர் மாக்கார் நிலையம் ஏற்பாடு செய்திருந்த வெலிகம பிரகடனம் தொடர்பான கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இக்கேள்வியை எழுப்பினார்.

வெலிகம பிரகடனம் இறுதி யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் வெளியிடப்பட்டது உக்கிரமான யுத்தம் நடந்து முடிந்து 8 வருடங்களாகியும் எமக்கு தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியாதுள்ளது. இப்பயணத்தை சரியாகச் செய்வதற்கு ஊடகங்களினது செயற்பாடுகளும் தடையாகவுள்ளது. நான் சிங்களப் பத்திரிகைகளைப் படிப்பதில்லை. தமிழ்ப்பத்திரிகைகளை வாசித்தால், குறிப்பாக வார இறுதிப் பத்திரிகைகளை வாசித்தால் இந்த நாடு ஒரு நாடாக இருக்கக்கூடாது என்ற உண்மைக்குப் புறம்பான காரணிகளை வைத்தே எழுதி வருகிறார்கள்.

தொடர்ந்து தெரிவித்த சுமந்திரன் எம்.பி,

இந்நாட்டில் யுத்தம் முடிவடைந்து புதிய ஆட்சியில் கடந்த 2016 மார்ச்சில் பாராளுமன்றத்தில் சகல கட்சிகளும் இணைந்து அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை கொண்டுவருதல் வேண்டும் என்ற அரசியலமைப்பு மசோதாவை கொண்டுவந்தபோது சகல பாராளுமன்ற உறுப்பினரும் ஏக மனதாக ஆதரவாக வாக்களித்தனர். அன்று எவரும் எதிர்க்கவில்லை. ஆனால் தற்பொழுது இந்த சட்டவரைபுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ஊடகங்கள் ஏன் அவர்களை அன்று பாராளுமன்றத்தில் ஏகமனதாக ஆதரவு தெரிவித்து விட்டு இப்போது மக்கள் மத்தியிலும் ஊடகங்களிலும் எதிர்க்கின்றீர்கள் என கேட்கவில்லை என கேட்க விரும்புகின்றேன். இவர்கள் சர்வஜன வாக்கெடுப்பு வேண்டாம். அல்லது புதிய அரசியலமைப்பு வேண்டாம் என சொல்கின்றனர். இவர்களது கருத்தினை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது இந்த ஊடகங்களே என தெரிவித்தார்.

பிரதம அதிதியாக சாபாநாயகர் கருஜயசூரிய, ஊடக தகவல் பாராளுமன்ற விவகார அமைச்சர் கயந்த கருணாதிலக்க, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பனர் எம். சுமந்திரன், லங்காதீப ஆசிரியர் சிறி ரணதுங்க, பேராசிரியர் சந்திரசிறி ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், அதிசங்கைக்குரிய கல்நந்த தம்மாநாந்த தேரர் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

அத்துடன் ஊடகங்களில் தற்போதைய நோக்குகள் பற்றி ஞாயிறு வீரகேசரி ஆசிரியர் எஸ்.பிரபாகரன், நவமணி ஆசிரியர் என்.எம் அமீன், சட்டத்தரணி ஜகத் லியனராச்சி, கலாநிதி டியுட்டா வீரசிங்க ஆகியோரும் ஊடகவியலளார்களுடன் கலந்துரையாடி கருத்துக்களை தெரிவித்தனர். இந் நிகழ்வுகளை முஹம்மத் நவாஸ் நெறிப்படுத்தினார்.

## விமலுக்கு மீண்டும் விளக்கமறியல்



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கூட்டு எதிர் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்சவிற்கு எதிர்வரும் ஏப்ரல் 3 வரை மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் நேற்றையதினம் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் போது, அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சென்ற போது, நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவினரால் விமல் வீரவங்ச ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார்.

பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சராக இருந்த காலப் பகுதியில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான பல்வேறு வாகனங்களை தவறாக பயன்படுத்தியதாக விமல் வீரவன்ச மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதன்மூலம் 41 மில்லியன் ரூபா இழப்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் கைது செய்யப்பட்ட விமல் வீரவங்ச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான புதிய பிரதிநிதியாக பதவியேற்ற ரிட்சு நக்கேன் நேற்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் சான்றுகளை கையளித்தார். பிரதிநிதி ரிட்சு நக்கேன் ஐ.நா அமைப்பில் 15 வருடங்களுக்கு மேலாக நிவ்யோர்க், பிஜி, எத்தியோபியா, வியட்நாம் போன்ற நாடுகளில் பல பதவிகளை வகித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜனநாயக தலைமைத்துவமொன்றிற்காக இளைஞர்களை வலுவூட்டல் கலந்துரையாடல்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை பல்கலைக்கழக மகளிர் கூட்டமைப்பு ஜனநாயக தலைமைத்துவமொன்றிற்காக இளைஞர்களை வலுவூட்டல் என்ற தலைப்பில் இன்று ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடலில் தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் மஹிந்த தேஷப்பிரிய கலந்துகொள்ளவுள்ளார்.

ஜனநாயக தலைமைத்துவமொன்றிற்காக இளைஞர்களை வலுவூட்டல் என்ற தலைப்பில் தேசிய ஆவணக் காப்பக கேட்போர் கூடத்தில் இன்று மாலை 3மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேநேரம், இலங்கை பல்கலைக்கழக மகளிர் கூட்டமைப்பின் சிங்கள, தமிழ் புத்தாண்டு நிகழ்வுகள் ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி கொழும்பு 8இல் அமைந்துள்ள இலங்கை பல்கலைக்கழக மகளிர் கூட்டமைப்பின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## விஷேட பங்களிப்புக்கான தேசிய விருது விழா

தாய்நாட்டிற்காக தமது விசேட பங்களிப்பை வழங்கிய 90 பேருக்கு விருது வழங்கும் தேசிய விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் இன்று மாலை 6.00 மணயளவில் இடம் பெறும்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறு துறைகளில் பங்களிப்பு செய்த இலங்கையர்களை பாராட்டும் நோக்கில் இந்த விருது விழா 12 வருடங்களின் பின்னர் நடைபெறவுள்ளது.

# நிரந்தர பொருளாதாரக் கொள்கை இன்மையே பொருளாதார பின்னடைவுக்கு காரணம்






(அ.அருண் பிரசாந்த்)

அரசுக்கு அரசு பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடைந்து வருவதாலேயே இலங்கை இன்னும் பொருளாதார ரீதியில் பின்தங்கி இருக்கின்றது என்று கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.

இந்நிலைமை மாறவேண்டுமெனில் நிரந்தரமான பொருளாதாரக் கொள்கையொன்று அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் மாகாண கூட்டுறவு அமைச்சர்களின் மாநாடு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், கூட்டுறவு அமைச்சுக்களையும் அதற்குக் கீழான நிறுவனங்களையும் சக்திப்படுத்த வேண்டும் என்றே நாம் கடந்த செயற்பட்டுவருகின்றோம். அதற்கிணங்க, கடந்த 10 வருடக்காலமாக இதில் இணைந்து பணியாற்றியோருக்கு ஓய்வூதியம் வழங்கும் செயற்திட்டம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இதற்கான வட்வரியை இல்லாதொழிக்கும் பேச்சுக்களிலும் நாம் ஈடுபடவுள்ளோம்.

மேலும், தற்போது நாடு சீராக சென்றுக் கொண்டிருந்தாலும் பொருளாதார ரீதியாக அது இன்னும் முன்னேற்றத்தை அடையவில்லை என்பதே உண்மையாகும். இதற்கு, அரசுக்கு அரசு பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடைவதே பிரதானக் காரணமாகும். கடந்த அரசுக்கள் செய்தமை நாட்டுக்கு உகந்ததா இல்லையா என்றுக் கூடப் பார்க்காமல் புதிய அரசுகள் நிறுத்திவிடும்.

அதேபோல், புதிய அமைச்சர் ஒருவர் பொறுப்பேற்றாலும் அதற்கு முன்னைய அமைச்சர் எதை செய்தார் என்றெல்லாம் கண்டுக் கொள்ளாமல் தமது பெயரை நிலைநாட்டும்வகையில் ஒரு திட்டத்தை மேற்கொண்டாலே போதும் என்று தான் செயற்படுகின்றார்.

இவ்வாறான நிலையான பொருளாதாரக் கொள்கையொன்று நாட்டில் இல்லாத காரணத்தினாலேயே நாடு இந்நிலைமையில் தொடர்ந்துக் கொண்டிருக்கின்றது. எம்மைப் பொறுத்தவரை அரசுகளோ அமைச்சர்களோ மாறினாலும் நாட்டுக்கு நிலையான பொருளாதாரக் கொள்கையொன்று வேண்டும் என்பதே உறுதியான நிலைப்பாடாகும் என்றார்.


### கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு

### கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்

**பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி) பதவி**
**ஒப்பந்த அடிப்படையில்**

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) பதவிக்காக கீழ் வரும் தகைமையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வி மற்றும் தொழில் தகைமை**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் குறிப்பிட்ட துறையில் ஆரம்பப்பட்டத்துடன் முகாமைத்துவ, கணக்கியல், அரச வியாபார அல்லது பொது நிர்வாக வணிக, பொருளியல், விஞ்ஞான, கலை பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் அமைப்பில் அங்கத்துவம் பெற்றிருத்தல்

**அனுபவம்**

பட்டப்படிப்பு தகைமையைப் பெற்ற பின், அரச கூட்டுத்தாபனம் நியதிச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்த பட்சம் 15 வருட அனுபவம் இருப்பது மற்றும் வலையமைப்பு செயற்பாட்டுத் தொகுதியில் நிதி தொடர்பு முகாமைத்துவம் செய்திருப்பது மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

**நியமனத்தின் தன்மை**

ஒப்பந்த அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு உரித்துடையவராவார்.

**சம்பளம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.**

**வயது**

35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

மேற்படி குறிப்பிட்ட தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகள் தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை 2017.03.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியவகையில் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

**தலைவர்**
**கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்**
27,வொக்ஷோல் வீதி, கொழும்பு-2.






சம்மாந்துறையில் கலை கலாசார மற்றும் ஊடகம் போன்ற துறைகளில் பலதரப்பட்ட பணிகளை முன்னெடுத்து வரும் திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பினால் நடாத்தப்படும் இணைய வானொலி ஆஸாத் எப்.எம் இன் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும், அறிவிப்பாளரும், கலைஞருமான ஏ.சி.நவ்சாதின் நெறிப்படுத்தலுடன், ஒருங்கிணைப்பாளர் கவிஞர் எ.அஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமூக சேவையாளர் நாசுருல்ஹக் ஏ.எல்.எம்.ஹபூல் ஆஸாத் பிரதம அதிதியாக கலந்து இணைய வானொலி சேவையினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
21ST MARCH 2017 - TUESDAY

# கிண்ணியா வைத்தியசாலை அபிவிருத்தித் திட்டம் 6 வருடங்களாக தேங்கிக் கிடப்பதற்கு யார் காரணம்?

கிண்ணியாவில் நேற்றும் டெங்கு நோய் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். இதுவரை கிண்ணியாவில் டெங்கு நோய் காரணமாக கர்ப்பிணித் தாய் ஒருவரின் வயிற்றில் இருந்த பிள்ளையுடன் 15 பேர் பலியாகியுள்ளனர்.

கிண்ணியாவில் டெங்கினை ஒழிப்பதற்காக கடந்த சில தினங்களாக அமைச்சர்கள் ஏட்டிக்குப் போட்டியாக அங்கு விஜயம் செய்து இந்நோயை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

13 பேரின் உயிரை பலியெடுத்த பின் நவமணி உட்பட சில ஊடகங்கள் இதன் பாரதூரம் பற்றி வலியுறுத்தி செய்திகளை வெளியிட்ட பின்பே அரசியல் தலைமைத்துவத்தின் அவதானம் இங்கு செலுத்தப்பட்டது.

கிண்ணியா சுமார் ஒரு இலட்சம் மக்கள் வாழுகின்ற சன அடர்த்திமிகு பிரதேசமாகும். அங்குள்ள தள வைத்தியசாலை பிரதேச மக்களது சுகாதார தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் அமையாமை இவ்வளவு மரணங்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

கிண்ணியா தள வைத்தியசாலையில் 132 கட்டில்களும், 24 டாக்டர்களும், 38 தாதிமாருமே உள்ளனர். இப்போது அவசர நிலை காரணமாக வெளியூர்களில் இருந்து டாக்டர்களும், தாதிமாரும் அனுப்பப்பட்டுள்ளனர். இந்த வைத்தியசாலை அதி தீவிர கண்காணிப்பு பிரிவொன்று கூட இல்லாத நிலையிலே இயங்கி வருகின்றது.

கிண்ணியா தள வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கு இற்றைக்கு 6 வருடத்திற்கு முன் ஒரு பாரிய திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் இத்திட்டம் இதுவரை கிடப்பிலே போடப்பட்டிருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவான மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், கிண்ணியாவைச் சேர்ந்தவர்கள். ஏனைய முஸ்லிம் கிராமங்களுடன் ஒப்பிடும்போது கிண்ணியாவுக்கு இதுவொரு வரப்பிரசாதம். 6 வருடங்களுக்கு முன் தயாரிக்கப்பட்ட வைத்தியசாலை அபிவிருத்தித் திட்டம் இதுவரை அமுல்நடத்தப்படாமைக்கு இந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் தார்மீக அடிப்படையில் பொறுப்புக்கூற வேண்டும். மூன்று உறுப்பினர்களும், ஆளும் கட்சியில் இருந்தும் இத்திட்டத்தை செயற்படுத்த அரசுக்கு அழுத்தங்களை கொடுக்கத் தவறிவிட்டார்களா? என்ற கேள்வியை சமூக அக்கறையுள்ளோர் எழுப்புகின்றனர்.

இந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் மூன்று கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்கின்றார்கள். இந்த மூவரும் ஒன்றிணைந்து அரசுக்கு அழுத்தம் கொடுத்திருந்தால் குறைந்த பட்சம் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டாவது இருக்கும். இங்கே நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புவது இது போன்ற பொது விடயங்களில் கட்சி வேறுபாடுகளை மறந்து மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வர வேண்டும் என்பதாகும்.

எல்லா விடயங்களையும் தமது கட்சிகளின் கண்ணோட்டத்தில் பார்ப்பது அல்லது தான்தான் செய்ய வேண்டும் என்று செயற்பட்டால் காரியங்களை இலகுவில் சாதிப்பது கடினமாகும். அவ்வாறு செயற்படும் பொழுது மற்றவர்கள் அதற்கு தடை போட முற்படுவார்கள்.

கிண்ணியா வைத்தியசாலை அபிவிருத்தித் திட்டம் 6 வருடங்களாக அமுல்நடத்தப்படாமையின் காரணமாக 14 உயிர்கள் பலியெடுக்கப்பட்டு சமூகத்திற்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்தாவது பாடத்தை கற்று பொதுப் பணிகளில் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு கிண்ணியாவின் அரசியல் தலைமைத்துவம் முன்வர வேண்டும். இதற்கான அழுத்தத்தை கிண்ணியா மக்கள் தம் பிரதிநிதிகளுக்கு வழங்க வேண்டும்.

முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் இவ்வாறு பல்வேறு இடங்களில் பிரிந்து செயற்பட்டதன் காரணமாக ஏற்பட்ட இழப்புக்கள் எண்ணிலடங்கா. இவற்றைப் பாடமாகக் கொண்டு கிண்ணியாவில் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் பொது விடயங்களில் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் முன்வர வேண்டும்.

# பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு பிரச்சினைகள் நிறைந்தது



ஹம்பாந்தோட்டை முதலீட்டு வலயம், சைட்டம் தீர்மானம், அரசின் ஸ்திரத்தன்மை, பொதுசன அரசியல் வாக்கெடுப்பு, பண்டாரநாயக்க கொள்கையில் மாற்றம் போன்ற விடயங்கள் தொடர்பாக விசேட செயற்றிட்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்த கருத்துக்கள்

பிகுன் மேனக கமகே

**கே: 60 மாதங்களில் புதிய நாடொன்றை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் அமைக்கப்பட்ட அரசு குறிப்பிட்ட காலத்தை கழித்தும், நாடு புதிதாக மாறியுள்ளதா? குறைந்த பட்சம் மாற்றத்திற்கான அடையாளங்களாவது காண முடியுமாக உள்ளதா?**

ப: முக்கியமான நிகழ்வு அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது. அதாவது அம்பாந்தோட்டை துறைமுகம் புதிய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு அம்பாந்தோட்டை முதலீட்டு வலயம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அது இலங்கை வரலாற்றின் திருப்புமுனையாகும். இந்த புதிய செயற்திட்டம் கூட்டு முயற்சியாகவே மேற்கொள்ளப்படுகின்றது. ஹம்பாந்தோட்டை சர்வதேச அபிவிருத்தி கம்பனியை அமைத்து அது இலங்கையில் பதிவு செய்யப்படும்.

**கே: அப்படியானால், துறைமுகத்தை விற்பது உறுதியாகிவிட்டதா?**

ப: விற்பது என்று சிலர் சொல்லும் கதையில் எந்த உண்மையும் இல்லை. 80 சதவீதம் சீனா மேச்சன்ட், 20 சதவீதம் இலங்கை துறைமுகம். 5 மாதங்களுக்குள் 80 சீன உரிமை 60 வீதமாக குறையும். அந்த 80 வீதம் என்பது 1.1 பில்லியன் அமெரிக்க டொலர். அதன் கீழ் அம்பாந்தோட்டை துறைமுகம் முன்னேற்றப்படுவது மட்டுமல்லாது அதனைச் சுற்றி பொருளாதார வலயம் ஒன்றும் உருவாகிறது. இப்போதே கப்பல் கட்டுதல், எண்ணெய் சுத்திகரிப்பு, எல்.என்.ஜி பிளான்ட் ஒன்றை உருவாக்குதல். 150 தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த பொருளாதார நடவடிக்கை மூலம் அடுத்த ஆண்டில் எமது பொருளாதாரத்தில் பாரிய மாற்றம் ஏற்படும்.

**கே: சிலர் ஏற்றுமதி விவசாயம் இதனால் வீழ்ச்சி காணும் என குற்றம்சாட்டுகிறார்கள், இந்த உபாய வழி மாற்றம் பயனுள்ளதாக அமையுமா?**

ப: தேயிலை, இறப்பர், தேங்காய் மற்றும் ஆடை என்பனவே எமது சம்பிரதாயபூர்வமான ஏற்றுமதிகளாகும். இலங்கையின் சம்பளம், சமூக நலன் என்பவற்றுடன் ஒன்றுசேரும் போது இந்த சம்பிரதாயபூர்வ ஏற்றுமதிகள் மூலம் எங்களுக்கு போட்டியிடுவது கஷ்டமாகும். வங்காளதேசம் தாய்லாந்து, வியட்நாம், சீனா போன்ற நாடுகள் எமது சம்பிரதாயபூர்வ ஏற்றுமதிகளை குறைந்த விலையில் உற்பத்தி செய்கின்றன. 200 வருடங்கள் நாம் இந்த ஏற்றுமதி மத்தியிலே தங்கியிருந்தால் அவற்றின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கும். புதிதாக ஏற்றுமதியுடன் தொடர்பான கைத்தொழில்களுடன் நாம் கைகோர்த்துக்கொள்ளவேண்டியது அதனாலாகும். சீனா மட்டுமல்ல ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளிலும் ஏற்றுமதி வலயங்களை ஏற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

**கே: இந்த நடவடிக்கை அம்பாந்தோட்டையில் ஏற்பட்டிருக்கின்ற சூட்டை தணிப்பதற்காகவா?**

ப: மனிதர்கள் காணிகளிலிருந்து, வீடுகளிலிருந்தும் அகற்றப்படுவார்கள். விகாரைகள் இல்லாமல் போகும் என எதிர்கட்சியினர் தவறான பிரச்சாரம் செய்தார்கள். அம்பாந்தோட்டையில் மட்டுமன்றி தேவை ஏற்படின் மொனராகலையிலும் காணிகளை வழங்க விரும்புகிறார்கள். இப்போதே இலங்கை முதலீட்டு வலயம் மிருஜவில பொருளாதார வலயம் மற்றும் மஹாவலிக்குரிய வெற்றுக்காணிகள் இருக்கின்றன. மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை போன்ற மாவட்டங்களில் இந்த முதலீட்டை ஆரம்பித்தது மக்கள் வசிக்கின்ற காணிகளில் அல்ல.

**கே: அரசு ஒரு பிரச்சினையை மறைப்பதற்கு உபாய வழியாக மற்றொரு பிரச்சினையை பயன்படுத்துவதாக சில கலந்துரையாடல்கள் ஏற்பட்டுள்ளன. அரசு மத்திய வங்கி பிணை முறி பிரச்சினையை அடிப்படுத்துவதற்காக சைட்டம் பிரச்சினையை பயன்படுத்துகிறது.**

ப: சைட்டம் பிரச்சினையை கொண்டு வருவதற்கான தேவை அரசுக்கு இருக்கவில்லை. அதனை எதிர்க்கட்சியே கொண்டுவந்தது. எதிர்க்கட்சி தமது உபாய வழிகளை தவறாக்கிக் கொண்டதற்கு நாம் என்ன செய்யலாம். அரசாங்கம் பிரச்சினைகளுக்கு நிகழ்ச்சி நிரலை தெரிவு செய்வதில்லை. அதற்கான நிகழ்ச்சி நிரல்களை தெரிவு செய்வது எதிர்க்கட்சியே. அதனுடன் ஊடகங்களும் கைகோர்த்துக்கொள்கின்றன.

**கே: ஜனாதிபதி அவர்கள் எல்லோருக்கும் நீதியான தீர்வொன்றை வழங்குவதாக கூறினார். எனினும் ஜே.எம்.ஓ பல்கலைக்கழக மாணவர் சங்கம் என்பன சொல்லுவது எல்லோருக்கும் நீதியான முறையில் பிரச்சினைக்கு தீர்வு என்பது காலம் தாழ்த்தும் ஒரு முயற்சி என்றே. எல்லோருக்கும் நீதியை நிலைநாட்டுவது எப்படி?**

ப: ஜனாதிபதி சொல்லுவது சரி. அந்த தீர்வு இந்த தீர்வு என ஜனாதிபதி கூறவில்லை. அவர் கூறியது எல்லோருக்கும் செவிமடுக்க வேண்டும் என்பதாகும். சைட்டம் பற்றி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. சைட்டம் விரோதிகள் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். இதிலே பிரதானமான இரு தரப்பினர் இருக்கின்றார்கள். இலங்கை வைத்திய சபை மற்றது அரச வைத்திய உத்தியோகத்தர் சங்கம். அந்த இரு தரப்பினரும் நீதிமன்றம் சென்றார்கள். அந்தரே என்கின்ற பல்கலைக்கழக மாணவர் சங்கம் நீதிமன்றம் சென்றதோ தெரியாது. இப்போது நீதிமன்றம் தீர்ப்பொன்றை தரும்வரை பார்த்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது.

**கே: தரப்பினர்கள் வேறுபட்டாலும் பொதுவாக எழுப்பப்படுகின்ற பிரச்சினை தரம் பற்றியதாகும். அதனை கைவிட்டுச் செல்ல முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள்;?**

ப: இதுவொரு வியப்பான பேச்சு. ருகுண பல்கலைக்கழகத்தின் தரம் பற்றி யாருக்குச் சொல்ல முடியும். வெளிநாட்டில் கல்வி கற்ற வைத்திய பீட மாணவர்கள் அக்ட் 16 பரீட்சை எழுத வேண்டும். நாம் சொல்வது சைட்டம் மாணவர்களுக்கு அதற்கு தோற்ற இடமளியுங்கள். கியூபாவில் நேபாளத்தில் இருந்து வருகின்ற ஒருவருக்கும் சைட்டமில் ஏன் மாணவராக இருக்க முடியாது. இவர்கள் எப்போதும் அரச பல்கலைக்கழகங்களில் தரத்தை மூடுகிறார்கள். அது பற்றி பேச விரும்பவில்லை. ஆரம்ப காலத்தில் மருத்துவ கல்லூரிக்கு சமாந்தரமாக பிற்காலத்தில் உருவான மருத்துவ கல்லூரிகள் அநேகமானவை சைட்டமுக்கு கீழ் இருப்பதாகவே நான் நம்புகின்றேன். சைட்டமின் முழுமையான பணியாளர்கள் இருக்கிறார்கள். பிரச்சினை கிளினிக் பயிற்சியாகும். அரசு அதனை வழங்கி மீண்டும் பெற்றுக்கொண்டது. எல்லாப் பக்கத்திலும் கடதாசியை மூடியே அடிக்கிறார்கள்.

**கே: எனினும், சைட்டம் விரோத சக்திகள் பலமான ஒரு சக்தியாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?**

ப: இறுதியில் எதிர்க்கட்சிகள் பெரும் சேற்றுக்குழியில் சிக்கியுள்ளனர். சைட்டம் சைட்டம் என சத்தம் போடுகிறார்கள். இந்த எதிர்ப்பு ஆரம்பிப்பதற்கு முன்பு சைட்டம் எதிர்க் கருத்து இருந்த அநேகர் இன்று சைட்டமை ஆதரிக்கிறார்கள். ஏனெனில், இரண்டு மூன்று மணி நேர எதிர்ப்புகள் மூலம் மக்களது வாழ்க்கையை சீர்குலைத்திருக்கிறார்கள். மத்திய வகுப்பு ஆட்களின் முகமூடி கணக்குகளை பாருங்கள். எல்லோரும் சொல்லுவது இது ஒரு பெரும் துன்புறுத்தல் என்று. இப்போது தொழில்நுட்பம் முன்னேறியிருக்கின்றது. பாதைகளுக்கு தடைபோடாமல் தகவல்களை வழங்க முடியும். இந்த தகவல்களை வழங்குவதற்கு பதிலாக மக்களுக்கு தொந்தரவு கொடுத்து அரசிடம் பதில் எதிர்பார்க்கிறார்கள். அது ஒருபோதும் நடக்காது.

**கே: இந்த அரசு உயர் கல்விக்கு ஒதுக்கிய நிதி இரண்டு மூன்று மடங்கு என்று அரசாங்கம் கூறினாலும், முன்னைய அரசை விட குறைந்த நிதியை ஒதுக்கியிருப்பதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கூறுகிறது? கல்வித்துறையில் அரசாங்கம் செய்வதாக கூறிய மாற்றங்கள் இதுதானா?**

ப: அதனை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. எஸ்.பி.திஸாநாயக்கவின் காலத்தில் சகல பல்கலைக்கழகங்களிலும் விடுதிகளை அமைக்க பலகோடி ரூபா ஒதுக்கப்பட்டன. இப்போது என்ன செய்திருக்கிறார்கள். பேராதனை பல்கலைக்கழகத்தின் 400 மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட உயர்மட்ட 4 மாடி கட்டடத்திற்கு லலித் அத்துலத்முதலி மண்டபம் என பெயர் வைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் அதன் நினைவுப் பலகையை உடைத்து நாசமாக்கியிருக்கிறார்கள். எல்லா மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் வழங்கி கல்விக்கு உதவும் மஹபொல திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் அவரே. அப்படிச் சொல்வது இவர்களுக்கு இந்த உலகத்தில் எதுவும் தெரியாது என்பதே. அண்மையில் வெளியான பேராதனை பகிடிவதை நிகழ்வின் போது சம்பந்தப்பட்ட எல்லோரும் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள். 7, 8 வருடம் பரீட்சைகளில் சித்திபெறாதவர்கள். துன்புறுத்தி அரசியல் சித்தாந்தங்களை நீட்டியது ஹிட்லர் கொபேல்ஸ்லா போன்றோரே. எல்லாவற்றுக்கும் முன் இந்த மாணவர் சமூகம் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

**கே: எதிர்க்கட்சி சேற்றுக்குழியில் சிக்கியிருப்பதாக நீங்கள் சொன்னாலும் ஜனாதிபதி அவர்கள் அடிக்கடி சொல்லுவது அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எவருக்கும் இடமளிப்பதில்லை என்பதாகும். இதை அடிக்கடி சொல்லுவது அரசுக்கு ஏதோ ஒரு வகையிலான அரசியல் பயம் ஏற்பட்டிருப்பதனால்தானே?**

ப: அப்படி ஒன்றும் இல்லை. ஜனாதிபதி அவர்கள் நினைப்பதை நான் சொல்கிறேன். எதிர்க்கட்சிகளுக்கு தூங்குவதற்கு கொடி ஒன்றுகூட இல்லாமல் போனால் அவர்கள் தமது கட்சிக்காரருக்கு சொல்லுவது நீங்கள் சற்று பொறுங்கள் நான் இன்னும் 3 மாதங்களில் அல்லது 1 வருடத்தில் அரசாங்கத்தை அமைப்போம் என்பதாகும். அரசாங்கத்தை விரைவாக வீழ்ச்சியுறச் செய்வதற்காக தேர்தலை அவசரமாக வையுங்கள் என்று சொல்லுவது அது அவ்வாறு நடப்பதற்காக அல்ல. ஏனெனில் மனிதர்களுக்கு தொழில் தேவை. அமைப்புக்கள் தேவை. திருமணம் மற்றும் சமூக வேலைகளுக்கு அனுசரணை தேவை. மஹிந்த காலத்திலும் அப்படித்தான் இருந்தது. எல்லா அரசாங்கமும் ஒன்றுதான். அக்காலத்தில் நாங்கள் இருந்தோம் தானே. அதிகாரங்களோடு இருப்பவர்களோடு மக்கள் இருப்பதற்கு விருப்பம். இலங்கையில் இது கீழ்மட்டத்திற்கு சென்றுள்ளது. அதிகாரம் உள்ளவர்களோடு இருக்காவிடில் எங்களுக்கு எதுவும் செய்ய முடியாது என்ற உணர்வு மக்களிடம் இருக்கின்றது.

**கே: கூட்டு எதிர்க்கட்சியினர் இந்த ஆண்டில் அரச மாற்றம் ஒன்று இடம் பெறும் என தெளிவாக கூறியிருக்கிறார்கள். நீங்கள் கூறும்படி அவற்றுக்கு இடமில்லையா?**

ப: இலங்கையின் வரலாற்றை பாருங்கள். 2, 3 வருடங்களில் உடைவது அரசல்ல. எதிர்க்கட்சி தான். சிலர் அரசாங்க கட்சியோடு இணைகிறார்கள். சிலர் நாட்டை விட்டு செல்கிறார்கள். கடந்த காலத்தில் அரசாங்கத்தில் பணம் சேர்த்தவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களை விட அப்படியானவர்களுக்கு சற்றுப் போக முடியும். ஒன்றும் சேர்க்காதவர்களுக்கு அவர்களால் செய்ய முடியாது. உண்மை அதுதான். எல்லா எதிர்க்கட்சிகளும் இப்படியாகத்தான் இருக்கின்றன.

**கே: பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு தொடர்பாக ஏற்பட்டுள்ள எதிர்ப்பு போன்று அச்சத்தை கைவிட்டு அதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பின்னடிக்காது முன்னிறங்க வேண்டும் என சில அரசியல் கட்சிகள் பிரேரிக்கின்றன. இந்த பிரேரணை பற்றி உங்கள் கருத்து என்ன?**

ப: இப்போதுள்ள 13ஆவது அரசியல் அமைப்பு திட்டத்தை மாற்ற வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கூறுவதில்லை. 13 இன் கீழ் மாகாண சபைகளுக்கு, காணி, பொலிஸ் அதிகாரங்களை சட்டப்படி வழங்கினாலும், ஜனாதிபதிகள் எவராயினும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டாலும், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அந்த அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று கூறுகின்றது. சிறு சிறு மாற்றங்கள் வேண்டும் என்றால் செய்யலாம். அதற்கு 2/3 போதுமானது. பொதுசன வாக்கெடுப்பு பற்றி பேசும்போது ஆலோசனை வழங்க சில என்.ஜி.ஓ.க்கள் பேராசிரியர் தேர்லுக்கு போவதில்லை. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பினால் அவர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுவதில்லை. எனினும் பெரும்பான்மை தரப்பிலுள்ள சிங்களத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த கட்சியும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பை விரும்பவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இதனை ஆராய்ந்து பார்த்து தீர்மானிக்க வேண்டும்.

**கே: 2020இல் ஜனாதிபதியாக வேண்டியது நீங்கள் வாக்களித்த மைத்திரிபால சிறிசேன அமைய வேண்டும் என்றும் அவருக்கு சிங்கள வாக்குகள் போன்று சிறுபான்மை இனத்தவர்களது வாக்குகளும் கிடைக்கும் என்று அண்மையில் சொன்னீர்கள். அப்படியானால் ஏன் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.**

ப: பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்புக்குச் சென்று வாக்களித்து நாம் வெற்றி பெற்றாலும், நாட்டின் இரு இனங்களும் இரு வகையில் பிரிந்தால் அது நல்லதல்ல. சிங்கள மனிதர்கள் வேண்டாம் என்று சொல்லும் போது தமிழ், முஸ்லிம் மக்கள் வேண்டும் என்று கூறியதாக நாங்கள் எண்ணி பார்ப்போம். அது இலங்கை தேசத்தின் வெற்றியாக அமையாது. அது வெற்றி பெறுவதை விட மோசமானது. நிரந்தரமாக நாங்கள் இரு பிரிவினராக பிரிகின்றோம். இந்த வெற்றியின் போது இனவாதிகள் வெற்றி பெறுவதற்கு சிங்கள மக்களுடைய அனுமதி இல்லாமல் தாம் விரும்பவில்லை என ரி.என்.ஏ கூறுகிறது. அதேபோன்று இனங்களின் அடிப்படையில் அவ்வாறு புறம்பான ஒரு தேர்தல் இருந்தாலும், எதிர்காலத்தில் கூட அவர்கள் இது நாம் பிரிவதற்கு அளித்த வாக்கு என்று கூறுவார்கள்.

**கே: கூட்டு எதிர்க்கட்சியினர் அரசியல் அமைப்பு வகுப்புக்காக நியமிக்கப்பட்ட உப குழுக்களில் தமக்கு அநீதி ஏற்பட்டதாக கூறினார்கள். அந்த இடங்களில் கலந்துரையாடல்கள் இடம்பெறவில்லையா?**

ப: இந்த பேச்சுக்கள் எப்போதுமே அரசியல் மட்டத்தில் பேசப்படுகின்றது. ஆரம்பத்தில் இந்த மலர் மொட்டு கட்சியினர் சரியான செயற்பாட்டுடன் இதில் தொடர்பு பட்டார்கள். இந்த அரசியல் யாப்பை மாற்ற வேண்டும் என்று முதலில் சொன்னதும் அவர்களே. தினேஷ் குணவர்தனவை எடுங்கள். புதிய கலப்பு தேர்தல் முறையை பற்றி கூடுதலாக வகுத்து வேலை செய்தது அவர்தான். அதனை சட்ட ரீதியாக அங்கீகரிப்பதை காண அவர் விருப்பம் இல்லையா? ஆனால் இப்போது அதற்கு போக வேண்டாம் என்று தாக்கம் செலுத்துகிறார்கள்.

(தொடர் 05ஆம் பக்கம்)

# பிணைமுறி புரளியை கிளறிவிட்டு எதிரணி அரசியல் இலாபம்

## அமைச்சர் தயாகமகே குற்றச்சாட்டு



(வத்துகாமம் நிருபர்)

ஒரு காலத்தில் இலங்கையில் மன்னார் பிரதேசத்தில் பெற்றோலியப் படிவுகள் உண்டு என்ற புரளியைக் கிளப்பி ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றிபெற்றவர்களும் உண்டு. இன்று மத்திய வங்கி முறிதொடர்பான புரளியை அவர்களே கிளப்பிட்டு அரசியல் இலாபம் தேட முற்பட்டுள்ளனர். ஆனால் 85 சதவீத விடயங்கள் முன்னைய ஆட்சியின் கொள்ளைகளின்படி நடந்தவைகளாகும் என்று ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயாகமகே தெரிவித்தார்.

பேராதனை விவசாயத் திணைக்களத்தில் அண்மையில் இடம்பெற்ற சர்வதேச மகாநாடு ஒன்றை ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். சிறு ஏற்றுமதிகள் விளைபொருட்கள் தொடர்பான நான்காவது வருட சர்வதேச ஆய்வரங்கை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். பசுமையான உலகுக்கான ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் என்ற தலைப்பில் இடம்பெற்ற இவ் அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

விஞ்ஞான ஆய்வுகள் இன்று பல மாற்றங்களைப் புரிந்துள்ளன. அந்த அடிப்படையில் உலக சனத்தொகைக்கு ஏற்ப உற்பத்தியை அதிகரிக்க புதிய ஆய்வுகள் தேவைப்படுகின்றன. ஆனால் அவை மனித அழிவுக்கு வழிகாட்டக் கூடாது என்றவகையில் சவால்கள் நிறைந்த ஒன்றாக உள்ளது.

ஆரம்ப கைத்தொழில் அமைச்சு என்ற ஒன்று உருவாக்கப்பட்டு நான்கு வருடங்கள் மட்டுமே ஆகின்றன. தேவையான விடயங்களைத் தேடிப்பிடித்து நாட்டிற்கு வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இன்று வரை இப்புதிய அமைச்சு 150 ஆய்வுகளைச் செய்துள்ளது. அதில் 138 ஆய்வுகள் இவ்வருடத்தில் மட்டும் மேற்கொள்ளப்பட்டவையாகும். அதில் 60 ஆய்வுகள் இச்செயலமர்வில் வெளியிடப்படவுள்ளன.

இவ்வாறான ஆய்வுகளுக்கு சகல மட்டங்களிலும் பாரியளவு பணம் செலவிடப்படுகிறது. காரியாலயத் தேவைகள், உதவியாளர்கள், பணியாளர்கள், அவர்களுக்கான அடிப்படை வசதி என பாரியதொகை செலவு செய்யப்பட்டு இறுதியாக ஆய்வுகள் யாவும் புத்தகங்களுக்கு மட்டும் வரையறை செய்யப்படுவது பாரிய தேசிய விரையமாகும். அவற்றை பயனுள்ள வகையில் மேற்கொள்ளப்படாமை ஏன் என்பதைத் தேடிப் பார்க்க வேண்டும். அதே நேரம் ஒரே விடயத்தை பலர் ஆய்வு செய்வதுடன் ஒரே நோக்கை அடைய பல அமைச்சுகளும் முற்படுகின்றன. இதுவும் ஒருவகை விரயமாகும். முதலாம் தரம் முதல் பல்கலைக்கழகம் வரை அரச செலவில் படித்து பின்னர் பி.எச்.டி. இற்கும் அரச நிதியைப் பெற்று கலாநிதியாகி நாட்டிற்கு பயனற்ற சேவையை அல்லது ஆய்வுகளைச் செய்வது பொருத்தமற்றது என்று கூறலாம்.

மிளகின் மருத்துவக்குணம் மிக உயர்ந்தது. ஆனால் நம் நாட்டில் யாரும் அதன் சுவை பற்றி அல்லது அதன் மருத்துவக் குணம் பற்றி ஆய்வுகளை வெளியிடவில்லை. இன்று சர்வதேச சந்தையில் மிளகு ஒரு கிலோ 1200 ரூபாவையும் தாண்டி விட்டது. ஆனால் நாம் 200 ரூபா போன்ற சிறு தொகைக்கு ஏற்றுமதி செய்கிறோம் வெள்ளை மிளகு பதனிடும் முறைபற்றிய அறிவு எமது பொது மக்களுக்கு வழங்கப்பட வில்லை. சில நாடுகள் எமது மிளகை மீள்பொதிசெய்து பாரிய இலாபம் ஈட்டுகின்றன. இப்படியான விடயங்களுக்கான ஆய்வுளை நாம் செய்ய வேண்டும் என்றார்.

## கட்டுநாயக்க விமாநிலைய ஓடுபாதை ஏப்ரல் 6 இல் திறப்பு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஓடுபாதை எதிர்வரும் 6ஆம் திகதி முதல் திறக்கப்படுமென்றும், அன்று முதல் விமான சேவைகள் வழமை போன்று இடம்பெறும எனவும் தலைமை சிவில் பொறியியலாளர் விஜய விதான தெரிவித்தார்.

ஓடுபாதைகளை திருத்தியமைக்கும் பணி எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி பூர்த்திசெய்யப்படவுள்ளது. இதன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

3350 மீற்றர் நீளத்தையும், 45 மீற்றர் அகலத்தையும் கொண்ட இந்த ஓடுபாதை சர்வதேச விமான, சிவில் விமான அமைப்பின் விதிமுறைகளுக்கு அமைய சீரமைக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்திற்காக 7 தசம் 2 பில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியையை இடமாற்ற வேண்டாம் பம்பரகலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)



லிந்துலை பம்பரக்கலை விவேகலையா பாடசாலை தமிழ் பாட ஆசிரியரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரி நேற்று பெற்றோர் மற்றும் மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.லிந்துலை பம்பரக்கலை விவேகலையா பாடசாலையின் தரம் 1 முதல் 11 வரை கல்வி பயிலும் மாணவ மாணவிகளும், மாணவர்களின் பெற்றோர்களும் பாடசாலை முன்றலில் காலை மூன்று மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.7 வருடங்களாக எங்களுக்கு கற்பித்த ஆசிரியரை வெளிப் பாடசாலைக்கு செல்ல அனுமதிக்க மாட்டோம், தரம் 11 வகுப்பாசிரியரை வேறொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்தால் பெற்றோர்களாகிய எங்களது நடவடிக்கை கடுமையானது என எழுதப் பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.மேற்படி ஆசிரியரை இடமாற்றம் செய்வதை ரத்து செய்ய வேண்டும் எனவும் இதற்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராடுவோம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்களும், மாணவர்களும் தெரிவித்தனர்.

## கிண்ணியாவில் டெங்குவால் கர்ப்பிணி பெண் மரணம்

(அப்துல்சலாம் யாசீம் சஹ்ரின் இஸ்மத்)

கிண்ணியா தள வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாய் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி நேற்று (20) பிற்பகல் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கிண்ணியா. றியாத் நகர் பகுதியைச் சேர்ந்த ஜவ்பர் ஜெஸீமா (38வயது) எனவும் தெரிய வருகின்றது.

கர்ப்பிணியான குறித்த பெண்ணின் சிசுவை மீட்கும் நோக்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சத்திரசிகிச்சைக்குட்படுத்திய பின் குறித்த தாயும் குழந்தையும் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## களனிப்பல்கலைகழக புதிய உபவேந்தர்

களனி பல்கலைக்கழக உபவேந்தராக பேராசிரியர் டி.எம். சேமசிங்க நேற்று பதவியேற்றார்.

இவர், களனி பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவப் பிரிவின் தலைவராகப் பணி புரிந்தார்.



அரனாயக கெடபேரிய அல்ஜெலால் முஸ்லிம் வித்தியாலயத்தின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடந்து முடிந்தது. போட்டிகளில் வெற்றிபெற்ற இல்லமொன்றுக்கு அதிபர் ஏ.கே.எம்.பைஸர் கேடயம் வழங்கி வைப்பதையும், சான்றிதழ்கள், பதக்கங்களுடன் வெற்றிபெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம். **(அரநாயக்க நிருபர் - எம்.ஆர்.எம்.அமீன்)**

## பொதுசன அபிப்பிராய்.....

(04ஆம் பக்க தொடர்)

அநேகமாக ஊடகங்கள் தான் இந்த நோயை போடுகிறார்கள். பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு வேத வாக்கு என்று நினைக்க வேண்டாம்.

**கே: ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு தேவைப்படுவது பண்டாரநாயக்க சிந்தனை என்று கூறுகிறார்கள். ஆனால் நீங்கள் அண்மையில் பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்தன, ரோஹண விஜேவீர சிந்தனைகளுக்கு நாடு சிக்கிக்கொள்ள வேண்டியதில்லை என்று கூறினீர்கள். நீங்கள் இது பற்றி என்ன கூறுகிறீர்கள்.**

**ப:** பண்டாரநாயக்க சிந்தனைகள் 50களில் இருந்தன. பண்டாரநாயக்க சிந்தனை என்று சொன்னாலும் அதன் பின் வந்த சகல தலைவர்களுக்கும் அது மாற்றப் பட்டது. ஸ்ரீ.ல.சு.க அரச நிறுவனங்களை விற்பதாக இப்போது ஒரு கதை பரவுகிறது. ஆனால் சந்திரிக்கா குமாரதுங்க காலத்தில் நடந்தது என்ன. ஸ்ரீலங்கன். எமிரேட்ஸ் என்பன கூட்டு முயற்சி ஆரம்பித்து. டெலிகொம்முடன் ஜப்பான் கம்பனி ஒன்று கூட்டு முயற்சி ஆரம்பித்தது. துறைமுகம் பி.என்.ஓ எனப்படும் நிறுவனத்தோடு கூட்டு முயற்சிக்கு சென்றது. இப்போது ஜே.வி.பி விற்கிறார்கள், தனியார்மயப்படுத்துகிறார்கள் என சத்தம் போடுகிறார்கள். ஆனால் உலகில் இன்று எங்கும் தனியார்மயம் இல்லை. நான் கண்டும் இல்லை. இப்போது எல்லா இடங்களிலும் செய்வது அரச மற்றும் கூட்டு முயற்சிகளாகும். சீனாவிலும் அப்படியே. சோசலிசம், தோல்விகண்ட நாடுகள் இருப்பதா என சுனில் ஹந்துநெத்தி ரூபவாஹினி நிகழ்ச்சி ஒன்றில் கேள்வி எழுப்புவதை நான் கண்டேன். உண்மையிலேயே எல்லா நாடுகளுக்கும் சோசலிசம் தவறாக இருக்கின்றது. இவ்வாறு கூறப்படும் சோசலிசம் இருப்பது இலங்கையில் ஜே.வி.பியிடம் மட்டுமே.

நன்றி லங்காதீப

## ஆவா குழு நாட்டின் பல பகுதிகளில் தலைமறைவு

ஆவா குழு என்ற பெயரில் யாழ். குடாநாட்டில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடும் சிலர் தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி நாட்டின் பல பகுதிகளில் தலைமறைவாகியுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

ஆவா குழு போன்று வடமாகாணத்தில் இயங்கும் அனைத்து குழுக்களிலும் உள்ள நபர்களை விரைவில் கைது செய்து, குடாநாடு உள்ளிட்ட வட பிராந்தியத்தில் நிலவும் குற்றச் செயல்களை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த குழுவை சேர்ந்த ஒருவர் தெஹிவளை பகுதியில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டதுடன், அவரை யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகளை முன்னெடுத்தபோது, குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்ட வாள்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

## பொது மக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு செயலமர்வு



(கிண்ணியா ஏ.ஆர்.எம்.றிபாஸ்)

டெங்கு விழிப்புணர்வு செயலமர்வு தேசிய டெங்கு ஒழிப்பு வைத்திய அதிகாரி .எம்.எஸ்.தௌபீக் கிண்ணியா தள வைத்தியசாலை வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.ஹில்மியினால் கடந்த சனிக்கிழமை கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காக்காமுனை பிரதேசத்தில் றஹ்மானியா ஜும்மா மஸ்ஜிதில் டெங்கு தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டது.பொதுமக்களுக்கு டெங்கு நோய் தொடர்பாக அறிவூட்டும் வகையில் கிண்ணியா பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல் ரீதியாக இவ்வாறான நிகழ்ச்சியை தொடர்ச்சியாக செய்வதனால் டெங்கு நோயை குறைக்க முடியும் என்பதற்காக முதற்கட்டமாக செய்யப்பட்டது

அதன் போது .எம்.எச்.எம்.ஹில்மி கூறுகையில், நுளம்பு மனிதனுடைய இரத்தத்தை ஏன் உறிஞ்சுகின்றது அதன் இனத்தை பெருக்குவதற்கு அதன் மூலம் மனித இரத்தத்தில் வைரஸ் தொற்றுக்குள்ளாகி டெங்கு நோயை ஏற்படுத்துகின்றது. டெங்கு நுளம்பின் வாழ்க்கை வட்டம் எவ்வளவு காலம் , எவ்வாறான இடத்தில் நுளம்பு இனப்பெருக்கம் செய்கின்றது, நுளம்பின் இனப்பெருக்கத்தை எவ்வாறு தடுப்பது என்பதையும் இஸ்லாம் சுத்தம் சம்பந்தமாக வலியுறுத்துவது தொடர்பாகவும் ஒரு சமூகத்தை பாதுகாப்பது இஸ்லாம் அதற்கு எவ்வாறான நன்மைகளை வழங்குகின்றது தொடர்பாக கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து எம்.எஸ்.தௌபீக் கூறுகையில்,

இன்று இலங்கையில் பல இடங்களில் காணப்படுகின்றது கிண்ணியாவில் சிறிய பரப்பில் அதிக மக்கள் வாழ்வதனால் நோய் தாக்கம் கூடுதலாக காணப்படுகின்றது இதற்கு சுத்தம் இன்மையே காரணம். ஆகவே சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் இன்று அரசு கிண்ணியா வைத்திய சாலைக்கு பல நிதிகளை ஒதுகிடு செய்துள்ளது. அதே போன்று நோயை கட்டுப்படுத்த கொழும்பில் இருந்து வைத்திய அதிகாரிகள் வந்துள்ளார்கள் இவ்வாறு இருக்கின்ற போது நாம் வைத்திய அதிகாரிகளையோ, வைத்தியசாலையை குறை சொல்வது தவறு நாம் முதலில் சுற்றாடலை சுத்தமாக வைத்து நுளம்பு பெருகுவதை தடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.


## கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு

## கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்

### முகாமையாளர் முதலீட்டு மேம்பாடு (பதவி)

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (முதலீட்டு மேம்பாடு) பதவிக்காக கீழ் வரும் தகைமையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வி மற்றும் தொழில் தகைமை**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவ, அரச அல்லது வர்த்தக, நிர்வாக, வணிகமாணி, பொருளாதாரம், விற்பனைத் துறையில் ஆரம்பப்பட்டம் பெற்றிருத்தல்.

**அனுபவம்**

பட்டத் தகைமை பெற்ற பின், அரச கூட்டுத்தாபனம் நியதிச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் குறிப்பிட்ட துறையில் மூன்று (3) வருட அனுபவம்

**நியமனத்தின் தன்மை**

நிரந்தர ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய உரிமைக்கு உரித்துடையவர்.

**சம்பள முறை**

முகாமைத்துவ சேவைத் திணைக்கள சுற்று நிருபத்துக்கு ஏற்ப,
MM 1-1 2006 - ரூ (25,640 - 3 x 665 - 7 x 735 - 15 x 925 - 46,655)
இதற்கு மேலதிகமாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**வயது**

22 வயதுக்கு குறையாது 45 வயதுக்கு மேற்படாது இருக்க வேண்டும்

மேற்படி குறிப்பிட்ட தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகள் தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை 2017.03.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியவகையில் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

**தலைவர்**
**கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்**
**27, வொக்ஷோல் வீதி, கொழும்பு** - 2.

# ஜலதரங்கம்

கலைவாதி கலீல்

கலை - இலக்கியம் - விமர்சனம்



# இடப் பெயர்வுக் கவிதைகள்

(கடந்த வார தொடர்ச்சி...)




**முல்லை முஸ்ரிபாவின்** மகா துயரழிக எனும் தலைப்பிலான கவிதை இப்படித் தொடங்குகிறது.

**எமை உயிருடன் எங்ஙனம் புதைத்தீர்**
**தோழர்காள்.**
**எனத் தொடங்கி,**
**எமை உயிருடனெங்கு புதைத்தீர்**
**தோழர்காள்.**
**என நகர்கிறது.**

முல்லை முஸ்ரிபாவின் 'மயூரா' என்றாகிவிட்ட நிஸ்மியாவுக்கு எனும் கவிதை இவரது கவிதைகளில் முக்கியமான கவிதை ஒன்று. அக்கவிதை தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் என்பதையிட்ட விரிவான ஓர் உரையாடலுக்கு வித்திடும் கவிதை. ஆயுதப் போராட்டத்தில் இணைந்து மரணித்து விட்ட வடபுலத்து முஸ்லிம் யுவதியை நோக்கிப் பேசும் இக்கவிதையின் ஓரிடத்தில்

**உள்மண் மீதான தீராப்பற்று**
**நாம் உறைய**
**முழுத்துண்டநிலமற்ற எமதும் மண்ணில்**
**உன்னைத் துயில்வித்தது நிரந்தரமாய்**
என்கிறார்.

அடுத்தவர் **யாழ். அஸீம்.** இவரது கவிதைகள் வடபுலத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களின் வரலாற்றை அவர்கள் விரட்டப்பட்ட நாள் தொடக்கம் பிறந்த மண்ணின் வாசத்தைக் கவித்துவச் சொற்களில், மெல்லிய சந்தத்துடன் உணர்ச்சிபூர்வமாக, இழந்த நிலத்தின் வரைபடத்தை, அதன் காட்சிகளை படிமங்களாகத் தருகின்ற கவிதைகளாக இருக்கின்றன. அத்தகைய கவிதைகள் கொண்ட இவரது தொகுப்பு ஒன்று **மண்ணில் வேரோடிய மனசோடு** எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது. இத்தொகுப்பு கொடகே சாகித்திய விருதையும் பெற்றுக் கொண்டது. அத்தொகுப்பில் இது கவிதையல்ல எனும் கவிதையில்

**இழந்த மண்ணுக்காய்**
**ஏங்கும் இதயத்தின் பெருமூச்சுக்கள்**
**இப்பொழுது நினைத்தாலும்**
**இதயம் சுடுகிறது - இல்லை**
**இதயம் எரிகிறது.**

அக்கவிஞர்களின் வரிசையில் அடுத்தவர் **உவைஸ்கனி.** இவர் மன்னாரைச் சேர்ந்தவர். இவரும் முஸ்ரிபாவைப் போல் வடபுலத்து முஸ்லிம்களின் இடம் பெயர்வு நிலையினை தனித்துவமான மொழியில் வெளிப்படுத்த முயற்சித்தவர். ஆனால் தொடர்ந்து அவரது கவிதையின் எழுத்துப் பிரதிகளைக் காண முடியாமல் இருக்கிறது. இவரது கவிதைகள் **மனிதனோடு நடந்தபடி கல்உயிர்** ஆகிய தொகுதியில் காணக்கூடியதாக இருக்கிறது. இவருடைய அகதி எனும் கவிதையில்

**எரிந்த கூரையாய் இன்று வரைக்கும்**
**வெளிக்காமல் போனது**
**எங்களுடைய கிழக்கு.**
**அது போலவே புழுதியின்**
**பொழுதுகளூடே**
**பூச்சியமாய்க் கழிகிறது வாழ்வு.**

மேற்குறிப்பிட்ட ஐந்து கவிஞர்களை முக்கிய கவிஞர்களாக குறிப்பிட்டதற்கு காரணம் இடம்பெயர்வு கவிதை இலக்கியம் என்பதற்கான முன்னோடிகள் இவர்கள் என்பதற்காக மட்டுமே.

இவர்களை தொடர்ந்து வட - புலத்து முஸ்லிம் சமூகத்திலிருந்து பல கவிஞர்கள் தோன்றாமல் இல்லை. அவர்களும் நிலம் இழந்த வட - புலத்து மக்களின் துயரைப் பாடித்தான் இருக்கிறார்கள். அவர்களை யாழ். முஸ்லிம் இணையத் தளத்தின் வெளியீடாக வெளிவந்துள்ள வட - கிழக்கு முஸ்லிம்களின் துயரைப் பாடுகின்ற கவிதைகளைக் கொண்ட **'வேர் அறுதலின் வலி'** எனும் கவிதைத் தொகுப்பில் இனங்காணக்கூடியதாக இருக்கிறது. அதில் வட - புலத்து முஸ்லிம் சமூகத்தில் பெண் கவிஞர்களும் இருக்கிறார்கள். என்பதையும் அத்தொகுப்பு இனங்காட்டியது. (உ-ம் ஜென்சிகபூர்)

இறுதியாக வட - புலத்து முஸ்லிம்கள், தான் இழந்த நிலத்தை முழுமையாக இன்னும் மீட்டு எடுக்காத நிலையில், பாகிஸ்தானிய பின் - காலனியச் சிந்தனையாளர் தாரிக் அலி குறிப்பிடுவது போல், சொந்த நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் புதிய கலாசார வாழ்வு முறை திணித்தலுக்கு ஆளாகுகிறார்கள் என்ற கூற்றுக்கு இணங்க, (இங்கு சொந்த நாடு என்பதை சொந்த நிலம் என்று நாம் வாசித்துக் கொள்ளலாம்) சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட வட - புலத்து முஸ்லிம்களில்,

அத்தகைய திணித்தலுக்கு ஆளாகிப் போன ஒரு புதிய தலைமுறை தோன்றிவிட்ட நிலையிலும், இழந்த மண் இன்னும் முழுமையாக மீட்டெடுக்கப்படாத நிலையிலும், வடபுலத்து முஸ்லிம் மக்களின் இடப்பெயர்வுக் கவிதைகளில் இழந்த மண்ணுக்கான ஏக்கமும் அவாவும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றுதான்.

(முற்றும்)

# இடங்கொடுங்கள் இலை மறை காய்களுக்கு

சோதரா,
என் தந்தை போன்று
கடமை உணர்வுடனும்
என் தாய் போன்று
கருணை உள்ளத்துடனும்
என் கணவன் போன்று
நேர்மையுடனும் என் சேவை!

சோதரா,
ஆசிரிய சேவையிலும்
ஆசிரிய ஆலோசகர்
சேவையிலும் - என்
அதிபர் சேவையிலும் கூட
பற்பல வருடங்கள் என் சேவை!

சோதரா,
என்னை சமூகத்திற்கு
அறிமுகம் செய்தவர் நீர்
என்னிடம் நவரத்தினங்கள் இல்லை!
ஆனால் நவமணிப் பிரதிகள் பல
என்னிடம்!
அவை என் 'முஸ்லீம் பாலிகா"
எனை உலகிற்கு அறிமுகம் செய்த
நவமணிப் பிரதிகள்
மிகவும் பத்திரமாய்
அவை என்னிடம்!

சோதரா,
இன்னும் பல பிஞ்சு நெஞ்சங்கள்
இலை மறை காய்களாய்!!!
அடையாளம் காட்டுவேன்
இடம் கொடுப்பீரா?
உங்கள் நவமணிப் பக்கங்களில்
கறுப்பு - வெள்ளை பரவாயில்லை
கலர் கேட்க மாட்டேன்!

**எஸ். ஏ. இஸ்மத் பாத்திமா**
**- பஸ்யால**



# தரிப்பு

# சபாஷ் பங்களாதேஷ்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு ஒரு ஷபாஷ் (ஷா - அப்பாஸ்) போடத்தான் வேண்டும். அதற்குப் பல காரணங்கள் உள. முதலாவதாக உலகில் உள்ள கிரிக்கெட் அணிகளிலேயே மிகவும் பலவீனமான அணி என்று கருதப்படும் அணி பங்களாதேஷ் அணியாகும். இரண்டாவதாக தோல்வியையே அதிகம் அதிகம் அடைந்த அணி. மூன்றாவதாக இலங்கை போன்ற அசுர பலம் வாய்ந்த கிரிக்கெட் அணியிடம் தோல்வியை மட்டுமே அடைந்து வரும் அணி.

ஆனால் அத்தகைய ஓர் அணி, பலம் வாய்ந்த இலங்கை அணியை இலங்கை மண்ணிலேயே வைத்து தோல்வியுறச் செய்திருக்கிறது. அதாவது, இலங்கையை அதன் சொந்த மண்ணில் வைத்து வெற்றிவாகை சூடியிருக்கிறது பங்காளதேஷ் அணி. அதற்காகத் தான் இந்த ஷபாஷ்.

ஒரு காலத்தில் கிண்டலுக்கும் கேலிக்கும் பொடு போக்குக்கும் உரித்தான அணியாகக் கருதப்பட்டு வந்த பங்களாதேஷ் அணி, அதனையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு திட்டமிடல், பொறுப்புணர்ச்சி, கடின உழைப்பின் மத்தியில் தனது அணியைச் சிறப்பாகக் கட்டி எழுப்பி, இந்த வெற்றியைப் பெற்றிருக்கிறது. இப்போட்டி பங்களாதேஷ் விளையாடும் 100 ஆவது டெஸ்டாகும். இதில் வெற்றி பெறுவதே பங்களாதேஷுக்குச் சிறப்பு அல்லது வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டாலும் அவமானமில்லை. ஆனால் தோற்றுவிடும் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் பலரும் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பத்தில், வெற்றிவாகை சூடியிருக்கிறது. அதுவும் மகத்தான வெற்றி! உண்மையில் பங்களாதேஷ் அணியின் வியூகம் சிறப்பானது. அது போட்டியில் பளிச்சிட்டிருக்கிறது.

கிரிக்கெட்டைப் பொறுத்தவரை ஒரு காலத்தில் எஜமானும் அடிமைகளும் விளையாடும் விளையாட்டு என்று கூறி வந்தனர். காரணம் எம்மை ஆட்சி புரிந்த சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தான் அடிமைப் படுத்திய நாடுகளிளெல்லாம் அறிமுகப்படுத்தியது அதனால் பிரபல்யப்படுத்தியது. ஆனால் அறிமுகப்படுத்திய இங்கிலாந்தைத்தவிர (எஜமான் நாடு) ஏனைய அடிமை நாடுகள் பலவும் உலகக்கிண்ணத்தை வென்றன. (உதாரணமாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான்)

பங்களாதேஷைப் பொறுத்தவரை அது இந்தியாவிலிருந்து பிரிந்து போன பாகிஸ்தானிடமிருந்து பிரிந்து கொண்ட நாடாகும். இந்தப் பிரிவினையினால் சர்வதேச மட்டத்திலான ஓர் அணிக்குப் பதிலாக மூன்று அணிகள் உருவாகின. அதுவும் ஒரு சாதனைதான்.

வரலாறுகள் எப்படியிருந்த போதிலும் இலங்கை மண்ணில் வைத்து இலங்கையை பங்களாதேஷ் வென்றது ஒரு சாதனைதான்; மகத்தான சாதனை!

அது மட்டுமல்லாது, இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரையும் சமப்படுத்தியுள்ளது.

இது பங்களாதேஷின் 100ஆவது டெஸ்ட் என்பதும் பங்களாதேஷுக்குப் பெருமைதான்.

பல்துறை ஆட்டக்காரர் சகிப் - அல் - ஹஸன், முஸ்தபிகுர் ரஹ்மான், தமீம் இக்பால் போன்ற சிறந்த வீரர்களை கொண்ட அணிதான் பங்களாதேஷ் அணி!

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியை **'தரிப்பு'** மனப்பூர்வமாக வாழ்த்துகிறது!

# என் தாய்

கருவில் உருவாய் சுமந்தாள்
கல்பில் உயிரைச் சுமந்தாள்
கருத்தினில் உலகை நிறைத்தாள்
கல்வியில் உயர்வைத் தந்தாள்

இளமையில் செழிப்பாய் இருந்தாள்
இன்பத்தை மட்டும் பகிர்ந்தாள்
துன்பத்தில் தனியாய் துவண்டாள்
தூரத்தில் கண்ணீர் துடைத்தாள்
எம்மைக் காணின் -
தூரத்தில் - தன் கண்ணீர்
துடைத்தாள்

ஆண்டுகள் ஓடின
அவசரமாய்
அறுபதைத்
தாண்டினாள்
அன்னையவள்
எழுபதிலும் ஏற்றாள் -
குடும்ப சுமை
எப்படிப் பார்த்தாலும் -
என்றென்றும்
அவளுக்கு நிகர் அவளே
உருவம் தளர்ந்தது,
முதுமை என்றார்கள்
உள்ளம் உறுதியானது
இளமை என்றேன்


எத்தனை துன்பம்
எதிர்வந்த போதும்
என்றும் தாங்குபவள்
அன்னை மட்டுமே

தாயாய், மகளாய், சகோதரியாய்
தளராது சரித்திரம்
படைத்திடுபவள் - அவள்தான்
என் தாய் - ஆம்!
காவியத் தாய் - அவள்
காலத்தை வென்றவள்

* பாத்திமா நஸ்வா ஷாமில் - எலுவிலை



# இறக்காமம் - ஒரு பார்வை




'கலையரசன்' என்ற புனைப் பெயரில் கலை, இலக்கிய உலகில் தடம்பதித்த **லரீப் சுலைமான்** என்ற எழுத்தாளரின் சொந்த ஊர் இறக்காமம்.

சிறுகதையூடே இலக்கியத்துள் நுழைந்த லரீப், அரசியல், சமூகவியல், வரலாற்றியல் சார்ந்த படைப்புகளை சமூகத்துக்கு வழங்கினார்.

இவர் எழுதியுள்ள நூல்கள்:- **திருமண பந்தத்தில் கணவன் மனைவி, ஒட்டுக்கதிர்கள் (சிறுகதைகள்) இறக்காமத்தார் பண்பாட்டுப் பாடல்கள்.**

ஆய்வு நோக்கின் தணியாத தாகமும் மொழிப்புலமையும், ஆழமான வாசிப்பும் நீண்ட தேடலும் கொண்ட லரீப் சுலைமான், பலரையும் சந்தித்து பல வருட முயற்சியின் பின்னர் சிதறிக்கிடந்த ஆவணங்களையெல்லாம் ஒன்றுதிரட்டி, **'இறக்காமம்'** என்ற இந்த ஆய்வு நூலை பற்பல சிரமத்தின் மத்தியில் வெளிக் கொணர்ந்துள்ளார். 560 பக்கங்களைக் கொண்ட ஒரு பூதப் புத்தகம் இது. உழைப்பு எத்தகைய கடினமானது என்பதை உணர்ந்து கொள்க.

86 வயதில் காலமான தனது பாட்டனார் அண்ணாவியார் மஹ்மூது லெப்பை - ஆதம்லெப்பை முஅத்தினாருக்கு இவ்வரலாற்று ஆய்வு நூலை சமர்ப்பணம் செய்திருக்கும் நூலாசிரியர், ஊர் அறிமுகம், வரலாறு, இருப்பும் சிறு கிராமங்களும், சமயத் தலங்களின் தொன்மை, வாழ்வியலும் பண்பாடுகளும், நாட்டாரியல், பொருளாதாரமும் தொழில் முறைகளும், கல்வி வரலாறு, இறக்காமத்தை நிர்வகித்தோர், நாட்டு வைத்தியர்கள், கலை இலக்கியத்துறை, அரச, தனியார் நிறுவனங்கள், வரலாறு சுட்டும் இடங்கள், இறக்காமம் கண்ட இழப்புகள், ஓய்வு பெற்றவர்கள், சமூக சேவையாளர்கள், சமகால வரலாற்றில் தடம்பதித்தோர், அரசியல் வரலாறு, ஏனைய தரவுகள் என்று பெரிய பெரிய அத்தியாயங்களில் நிறைய விடயங்களை நெருக்கிப் புகுத்திவிட்டார்.

ஒரு விடயம் தெரியுமா? இந்த இறக்காமத்தில்தான் தமிழ் கூறு நல்லுலகெங்கும் புகழ் பெற்ற அந்தக்கவி, இசைக் கோகிலம், **மீராஉம்மா** வாழ்ந்து வருகிறார். பிறவியிலே கண்ணில்லை. ஊமைக்கண் போனாலும் ஞானக் கண்ணால் உருவகித்துப்பாடும் வல்லமையுள்ளவர். 13 வயதில் கணீரென்ற கம்பீரக் குரலில் இனிமை சொட்ட பாடிய மீரா உம்மா 2000 க்கும் மேற்பட்ட பாடல்களை தானே எண்ணி (வரகவி) உணர்ந்து பாடியுள்ளார். பல விருதுகள் பெற்றிருந்தாலும் 1991இல் **ஏ.எச். எம். அஸ்வர்** அமைச்சரால் (அமைச்சினால்) வழங்கப்பட்ட 'பொற்கிழி'யும் பட்டமும் அலாதிதான்! பட்டத்தின் மகுடம் **சௌத்துல் அந்தலீப்** ஆகா அருமை! (இசைக்கோகிலம்)

அது மட்டுமல்லாது, மீள்பார்வையில் ஆசிரியர் ஆய்வாளர் பன்னூலாசிரியர் அஷ் ஷெய்க் **றவூப் ஸெய்ன்,** அறிவிப்பாளர் **ஏ.எல். ஜபீர்,** கல்முனை ஸாஹிராவின் முன்னாள் அதிபர் **அபூபக்கர் லெப்பை** போன்ற இன்னும் பல பிரபலங்கள் இறக்காமம் என்பதை அறிய மகிழ்ச்சியளிக்கிறது.

கப்பல் காலம் முதல் இன்றைய விமான யுகம் வரை இறக்காமத்திலிருந்து சென்று புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய அனைவருடைய பெயரையும் நூல் தாங்கியுள்ளது.

அதுமட்டுமல்லாது, அனைத்து அரச ஊழியர், தனியார் நிறுவன ஊழியர்கள், காவல் துறையினர் ஆகியோரின் பெயர் நாமாவாளிகளும் ஆய்வு நூலில் இடம் பெற்றுள்ளமையால் இந்நூல் இறக்காமத்தின் Gazettier ஆகிறது.

நூலைப் புரட்டப்புரட்டப் புகைப்படங்கள்தான். சுமார் முன்னூறு (288) கறுப்புவெள்ளை பழைய + புதிய புகைப்படங்கள் நூலை அலங்கரிக்கின்றன. இப் புகைப்படச் சேர்க்கை ஒரு பகிரத முயற்சியெனலாம்.

இவ்வாறு கலை இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், புகழ் பெற்ற வானொலிக் கலைஞர்கள் அறிவிப்பாளர்கள் பலர் இவ்வூரவரே என்பதை இந்நூல் பறைசாற்றி நிற்கிறது.

உண்மையில் மிகமிகப் பெறுமதியான நூல் 'இறக்காமம்' என்பது என் கருத்து

-கலை

வாரா வாரம் ஜலதரங்கத்தில் சிறுகதையொன்று பிரசுரமாகும் புகழ்பெற்ற மூத்த சிறுகதாசிரியர்களின் கதையும், இளம் எழுத்தாளர்களின் கதையும் மாறி மாறி பிரசுரமாகும். சிறுகதைகள், ஏ4 தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படக்கூடாது.

இளம் எழுத்தாளர்கள் கீழ்வரும் படிவத்தை பூர்த்திசெய்து சிறு கதைகளுடன் அனுப்பி வைக்கலாம். தரம் கண்டு பிரசுரமாகும்.

## சிறு கதைப் படிவம்

பெயர்: ............................................................

முகவரி: ............................................................

வயது: ....................

சிறுகதையின் பெயர்: ............................................................

கையொப்பம்:....................................

அனுப்ப வேண்டிய முகவரி:
**''ஜலதரங்கம்''**
**நவமணி**
**156, ஆஸ்பத்திரி வீதி,**
**களுபோவில**



# குறைந்து வரும் நீர்வளம்



## உலக நீர்தினம் நாளை 22 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

பி.எம்.முக்தார்

உலகில் காணப்படும் சுத்தமான நீரின் அளவு தீர்ந்து கொண்டு வருகின்றதென்பதைச் சகலரும் உணர்ந்து கொள்ளவேண்டியுள்ளது. மனிதர்களால் இந்த ஜீவன வளத்தை மிகவிரைவில் நாசம் செய்வது இதற்குரிய பிரதான காரணியாகும். கழியும் ஒவ்வொருவினாடியும்,ஒவ்வொரு தினமும் சுத்தமான நீருக்காக நிலவும் கேள்வி பாவனையில் உள்ள நீர் விநியோகத்தையும் மிஞ்சியதாக இருக்கிறது. இப்பீதி இலட்சக்கணக்கிலான எமது மக்களின் கவனத்தை ஈர்ப்பதுடன் சவாலை நோக்கியும் வழி நடத்தப்படுவதை விளங்கிக் கொள்ள வேண்டும்.



> **எதிர்காலத்தில் உலகில் வாழும் மக்கள் தொகையின் 1/4 பங்கினர் சுத்தமான குடிநீர் பற்றிய பாரிய பிரச்சினைக்குமுகங்கொடுக்க வேண்டிய நிலைஏற்படும். அவ்வாறு ஏற்படுவதற்கு முக்கிய ஏதுவாக அமைவது எமது நடவடிக்கைகளும் கவனக் குறைவுகளும் என்பது தெளிவு. இதற்காக நகரத்தைப் போன்று நகரில் வாழும் மக்களும் பாடசாலை மாணவர்களையும் விழிப்புணர்த்துவதற்கு இந்தச் செயல்முறை வேலைத்திட்டத்திற்காக வழிப்படுத்தப்பட வேண்டும்.**

முழு அளவிலானஉலகின் நிலப்பரிமாணத்தின் 70இற்குமேலான பரப்பளவினை மூடியுள்ளது நீரேயாகும்.

கிளேஸியர் மற்றும் தேங்கியிருக்கும் நீரின் அளவுநீங்க 0.003க்கும் குறைவான அளவு மக்களின் பாவனைக்காக பேணப்பட்டாலும் இன்று அதுவும் குறைந்துகொண்டே வருகின்றது. அதுவுமன்றி உயிரினங்களின் நிறையின் 50-90 வரை நிரம்பி இருப்பதும் நீரினாலாகும். நீர் எனப்படும் இந்த வளம் புவியில் வாழும் உயிரினங்களை போஷிப்பதோடு சந்தர்ப்பத்திற்குச் சந்தர்ப்பம் வேளைக்கு வேளை எதிர்பாராத பெருக்கெடுப்பின் மூலமான அழிவும் ஏற்படுவது நீரின் கட்டாய இயற்கைத் தன்மையாகும்.

நீர் இல்லாது வாழ முடியாத அளவுக்கு நீர் ஒரு சிறப்பு வாய்ந்த வளமாகும். இதற்குமாற்றீடும் இல்லை. எனினும் நெருப்பைப் போன்றே நீருடனும் விளையாட முடியாது. அதற்கான காலம் இதுவல்ல. வரலாறு எமக்குப் புகட்டும் பாடத்தை நாம் நினைவு கூர வேண்டும். தாமதமின்றியாவது நீர்ப்பாவனை பற்றிய தேவைகள் மற்றும் அதன் முன்னுரிமைகளைச் சரியாக இனம் கண்டு மற்றும் வகைப்படுத்திக் கொள்ளாதபட்சத்தில் குறைந்தபட்சம் குடிக்கும் நீராவது இல்லாது பற்பல கஷ்டங்களுக்கு (முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்).

எதிர் காலத்தில் உலகில் வாழும் மக்கள் தொகையின் 1/4 பங்கினர் சுத்தமானகுடிநீர் பற்றிய பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டியநிலைஏற்படும். அவ்வாறு ஏற்படுவதற்கு முக்கிய ஏதுவாக அமைவது எமது நடவடிக்கைகளும் கவனக் குறைவுகளும் என்பது தெளிவு. இதற்காக நகரத்தைப் போன்று நகரில் வாழும் மக்களும் பாடசாலை மாணவர்களும் விழிப்புணர்த்துவதற்கு இந்தச் செயல்முறை வேலைத் திட்டத்திற்காக வழிப்படுத்தப்பட வேண்டும்.

உலகில் பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப பாவிக்கப்படும் நிலத்தில் பொதிந்த நீரின் அளவு அதிகரிக்கப்படாமையும் மக்களின் செயல்பாட்டின் மூலம் சுத்தமான நீர் அசுத்தமடைவதும் காரணமாக மக்களுக்கு தேவையான சுத்தமான நீர் பற்றாக்குறைக்குள்ளாகி இருக்கும் முக்கியமான பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

தொழிற் துறைகள் பெருகின்றமக்கள் பரம்பல் மூலம் இந்த நகரமயமாதல் காரணத்தினாலும் இந்த நிலைமை விரிவடைந்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். தொழில்மயமாதல் காரணமாக தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படுவது,பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப மக்கள் நகரமயமாதலில் ஈடுபடுவதும் நகரமற்றும் கிராமிய குடிசை வாழ் மக்கள் நதிகள்,நீர் நிலைகள் என்பவற்றை அண்மித்து நிலை பெறுவது மூலம் கஞ்சல்,குப்பை முதலிய அசுத்தமான பொருட்களினால் சுற்றாடலைப் போன்றுநீர் நிலைகளையும் அசுத்தப்படுத்துவது போன்றவை நிகழ்கின்றன. உதாரணமாக கவனிக்கும்போது களனி ஆற்றின் இறுதிப் பகுதியில் தொழிற்சாலைகளைப் போன்று குடியிருப்பாளர்களாலும் பலவகையான கழிவுப் பொருட்கள் போன்ற குப்பை கூளங்கள் களனிஆற்றில் இடப்படுவதனால் ஏற்பட்டிருக்கும் நிலைமை கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும். கொழும்புநகரத்தில் மாத்திரம் 2000ஆம் ஆண்டில் தினமும் 9000 தொன்னுக்கு மேற்பட்ட குப்பைக்கூளம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் சுற்றாடலைப் போன்று நீரின் தூய்மையற்ற தன்மையும் பெருமளவில் பாதிப்பைஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொருமனிதனதும் அடிப்படைத் தேவையொன்றான நீரை பங்கீட்டுப் பாவனையைப் போன்றுஅதனைவீண் விரயமாக்காமல் இருப்பதற்கு எம்மனைவரிடத்திலும்,உண்மையான திடசங்கற்பத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தஏற்பாட்டில் நீரை முறையாக முகாமைப்படுத்துவதற்கு வழி காட்டுதல், நீரைப் பாதுகாப்பதற்கு ஊக்கமளித்தல்,

நீர் வீண் விரயமாதல் போன்று அசிங்கமாவதற்கு மானகாரணிகளைத் தடுத்துக் கொள்வதற்கு உள்ள வழிவகைகளைப் போலவே சுத்தமானகுடிநீரின் வரப்பிரசாதத்தைப் போன்று உரிமையும் சகலமக்களுக்கும் சமமாகப் பகிர்ந்துசெல்லும் வகையில் பின்னணியொன்றை அமைப்பது வேண்டற்பாலது.

இயற்கையின் வள்ளண்மை தொடர்ச்சியாகவும் சகலமுறைகளிலும் எமக்குவாய்ப்பாக அமையாமல் இருக்கலாம். தாராளமானதாகவும் இயைபானதாகவும் இல்லாமல் இருக்கலாம். அது மானுடர் பேரில் காட்டும் பாரியவீண் விரயம்,

நீர் அசிங்கமாதல், நீரின் முறைகேடான பாவனை ஆகிய செயல்பாடுகள் பற்றி இயற்கை வள்ளண்மையால் வினவாமலே அதற்கு தக்க பிரதிபலனை மிகவும் விரைவாகவே நாம் அனுபவிக்க வேண்டியேற்படும்.

இன்று உலக சனத் தொகையில் கூடியஎண்ணிக்கையானோர் அதாவது 40 க்கும் கூடிய தொகையினர் சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பின்றி இருப்பதுபோன்று சுக நலக்காப்பு வசதிகள் அற்ற நிலைக்குள்ளாகி இருக்கின்றனர். உலக சனத்தொகையில் கோடிக் கணக்கானோர் நீர் தொடர்பான நோய்களினால் பீடையுற்றுள்ளனர். துயருறுகின்றார்கள். நீர் பற்றாக் குறையின் எதிர்த்தாக்கத்தினால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக 2020ஆம் ஆண்டாகும் போது பாதுகாப்பானகுடி நீரைப் பெற்றுக்கொள்ளமுடியாத அல்லது அது சம்பந்தமான பாரிய பிரச்சினையைத் தாங்கிக்கொள்ள முடியாத உலகசனத்தொகையின் விகிதாரசாரத்தைக் குறைப்பதுடன் அங்கீகாரமற்றநீர்ப் பாவனையைக் கட்டுப்படுத்தலும் மற்றும் தடுக்கும் வழி வகைகள் பற்றியும் அத்தகைய மாற்றீடுமற்றும் வழி முறைகள் பற்றியும் உலக வல்லாரின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

ஆதலால், எதிர்கால உலகில் நீர் பற்றாக்குறைக்கு முகங்கொடுக்கும் வேளையில் அறிவூட்டல் பெறுபேற்றினை எட்டக்கூடிய நீண்டகால வேலைத்திட்டம் பற்றிக் கவனம் வெலுத்த வேண்டியுள்ளது.



ஆண்டுக்கொரு முறை மார்ச் மாதம் 22ஆம் திகதி உலக நீர் பிரச்சினை பற்றி நினைவூட்டுதல் அத்தோடு நினைவு கூருதல் அளவில் மட்டுப்படுத்தாமல் அகில உலக மக்களின் பாரிய பிரச்சினைகளாகத் திகழும் இந்த நீர் பற்றாக்குறைக்குச் சாதகமான பெறுபேற்றினைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டங்கள் மற்றும் வழிவகைகள் பற்றிய தொடர்ச்சியான கவனம் எடுக்கப்படுதல் வேண்டும்.

எமதுநாட்டில் தேசியநீர் விநியோகவடிகாலமைப்புச் சபை தேசியமட்டத்தில் எதிர்காலத்தை இலக்காகக் கொண்டு ஆரம்பித்துள்ள நேரடிவேலைத்திட்டம் எமதுஎதிர்கால இலக்கை சாத்தியப்படுத்துவதுபோன்று உலகநீர் தினம் கொண்டாடப்படும் இன்றைய தினத்தை முக்கியமானதும் அதிவிசேடசந்தர்ப்பமாகக் கருதிச் செயல்படுவது மதிக்கத்தக்கது.






## ஸாஹிராவின் 'நெம்புகோல்' ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ்



1867 ஒக்டோபர் 27 இல் புகழ்பூத்த ஒரு குடும்பத்தில் ஐதுருஸ்லெப்பை மரிக்காரின் புதல்வராக அப்துல் அஸீஸ் பிறந்தார். சிறு வயதிலேயே குர்ஆனையும், தமிழையும் தந்தையாரிடம் கற்றபின் புறக்கோட்டை அராங்கப் பாடசாலையொன்றில் ஆங்கிலம் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்ற அப்துல் அஸீஸ், முஸ்லிம் முன்னோடி எம். சீ. சித்தி லெப்பை முன்னெடுத்த சமூகப் பணிகளுக்குத் தனது பூரண பங்களிப்பை வழங்குவதில் முன்னின்றார். சித்தி லெப்பை ஆரம்பித்த 'முஸ்லிம் நேசன்' பத்திரிகையின் பதிப்பாசிரியராக 1889லிருந்து பணியாற்றினார்.

1900லிருந்து கொழும்பு சோனகர் சங்கத்தின் தலைவராகவும், மருதானை பள்ளிப் பொறுப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றினார். தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலும், ஆழமான அறிவும் மிக்க அப்துல் அஸீஸின் ஆய்வுத் திறமைக்கு 'இலங்கைச் சோனகர் வரலாறு' என்ற ஆய்வுப் படைப்பு ஆதாரமாகும்.

அன்றைய சட்டவாக்க சபையில் தமிழ் பேசும் மக்களை ஒரே ஒரு தமிழ் உறுப்பினரே பிரதிநிதித்துவம் செய்தார். (சட்டவாக்க சபையில் முஸ்லிம் பிரதிநிதியொருவர் இடம் பெற வேண்டுமென்ற கோரிக்கையை எம். சீ. சித்திலெப்பை 1880களில் முன்வைத்தார். அப்பொழுது சேர். பொன்னம்பலம் இராமநாதன் ''முஸ்லிம்கள் தமிழ்பேசும் மக்கள் என்றும் அவர்கள் தமிழ் இனத்திலிருந்து இஸ்லாத்திற்கு மதம் மாறியவர்கள்'' என்றும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவக் கோரிக்கையை எதிர்த்து நின்றார்)

அப்பொழுது ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் இலங்கைச் சோனக சங்கத்தின் ஆதரவுடன் 1907 இல் இலங்கைச் சோனகர் வரலாற்றை ஆய்வு செய்து, (''இலங்கைச் சோனர் புறம்பான ஓர் இனம்; அவர்கள் அரேபியரின் சந்ததியினர்'') என்பதை ஆய்வு செய்து 'இலங்கைச் சோனகர் வரலாறு' என்ற நூலை முன்வைத்ததன் மூலம் டபிள்யூ. எம். அப்துல் ரஹ்மான் சட்டவாக்க சபைக்கு முதல் முஸ்லிம் பிரதியாகச் செல்ல முடிந்தது.

இது பற்றி அப்துல் அஸீஸ் குறிப்பிடும் போது('' நான் சேர். பொன்னம்பலம் இராமநாதனைக் குறை காண்பதில் மகிழ்ச்சியடையவில்லை. அவர் பார், புகழ் பண்பாளர். இலங்கைச் சோனகர் பற்றிய வரலாற்றையும், ஆரம்பத்தையும் தவறாகப் புரிந்துள்ள அவரது கருத்துக்களை களைந்தெறிவதே எனது நோக்கமாகும்'') என்றார்.

(''முஸ்லிம்கள் இஸ்லாம் பற்றிய தவறான கருத்துக்களைப் பெறக் காரணம் குர்ஆன், சுன்னாவைப் பற்றிய பூரண அறிவு இல்லாமையே'') என்பதைக் கருத்தில் கொண்ட அப்துல் அஸீஸ், 'முஸ்லிம் கார்டியன்' பத்திரிகையின் மூலம் முஸ்லிம்களின் இஸ்லாமிய அறிவைப் பெருக்க வழிசமைத்தார்.

1913இல் மருதானை பள்ளிவாசல் முகாமையாளராக ஐந்து வருடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு, அக்காலக்கெடு முடிந்ததும் மீண்டும் ஐந்து வருடங்களுக்கு முகாமையாளராகத் தெரிவு செய்யப்பட்ட போது, ஜமாஅத்தில் சிலர் இதனை எதிர்த்து இறுதியில் பிரிவு கவுன்சில் வரை வழக்குச் சென்றது. (இது எமது சமூகத்தில் வழமையாக உள்ள குறைபாடாகும்) தனது பதவிக்காலத்தில் அப்துல் அஸீஸ் மருதானை மஸ்ஜித் வளவைச் சுற்றி மதில் கட்டினார். இவரது காலப் பகுதியில் மஸ்ஜிதின் வருமானம் அதிகரித்திருந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1906இல் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தார். முஸ்லிம் பெண்கள் இஸ்லாமிய வரையறைகளிலிருந்து விலகாமல் கல்வி, சமூக, அறிவியல், ஆத்மீகத் துறைகளில் பொற்காலத்தைக் காண பர்தா முறையில் சீர்திருத்தம் கொண்டுவந்தார். (''குர்ஆனை ஓதினால் நன்மை கிடைக்கும்; ஆனால் ஓதினால் மட்டும் போதாது. அவற்றை மொழி பெயர்த்து விளக்கமளிப்பது உலமாக்களின் கடமை'') என ஆணித்தரமாக கருத்து வெளியிட்டார்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரபியில் மட்டுமே குத்பா ஓதும் வழக்கமிருந்தது. 1912இல் யாழ்ப்பாணம் சென்ற அப்துல் அஸீஸ், குத்பாக்களை தமிழிலும் மொழிபெயர்த்து ஓத வேண்டுமெனக் கேட்டு, நடத்திய உருக்கமான பிரசங்கத்தின் மூலம் அரபியில் மாத்திரம் குத்பா ஓதும் வழக்கம் கைவிடப்பட்டது.

அட்வகேட் என். எச்.எம். அப்துல் காதர் துருக்குத் தொப்பி அணிந்து நீதிமன்றம் சென்றதை எதிர்த்த துருக்கித் தொப்பி போராட்டக்குழுவில் ஐ. எல்.எம். அப்துல் அஸீஸ் முக்கிய உறுப்பினராக இருந்து நீதிக்காகப் போராடினார்.

ஏ.எம். வாப்பிச்சி மரிக்காரின் பேருதவியுடன் அறிஞர் சித்தி லெப்பை ஆரம்பித்த கல்வி இயக்கத்துக்கு முழு ஆதரவு வழங்கிய ஐ.எல். எம். அப்துல் அஸீஸ் பற்றி வழக்கறிஞர் ஏ.ஸீ. முஹம்மது ஸாஹிராவின் பரிசளிப்பு விழாவொன்றில் (''ஸாஹிராவின் நெம்புகோல் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ்'') என்று குறிப்பிட்டு அவருக்கு நன்றி தெரிவித்தமை அப்துல் அஸீஸ் நற்பணிகளுக்குச் சான்றாகிறது.

நாட்டுக்கும், சமூகத்துக்கும் நற்பணியாற்றி மறைந்த பெருந்தகை ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், ''றிஸாத் ஏ. அஸீஸ்'' என்ற வாரிசை எமது நாட்டுக்கு வழங்கி, 1915 செப்டம்பர் 11இல் இவ்வுலகைப் பிரிந்தார்.

அல்லாஹ் அன்னவரது நற்பணிகளைப் பொருந்திக் கொள்வானாக!

## இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் எயிட்ஸ் நோயாளிகள்; கடந்த 2 மாதங்களில் மாத்திரம் 55 பேர்

இலங்கையில் 2017, கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் 55 பேர் எச்.ஐ.வி நோயாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் மற்றும் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த எச்.ஐ.வி பாதிப்பிற்குள்ளானவர்கள் பெரும்பாலும் ஆண்களே எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எச்.ஐ.வி பரிசோதனைக்காக வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




இந்நிலையில் கணேமுல்ல பகுதியைச் சேர்ந்த தாய் ஒருவருக்கு எச்.ஐ.வி. நோய் இருப்பதால் அவருடைய மகளை பாடசாலையில் இணைத்துக்கொள்ள பாடசாலை நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பதாகவும் குளியாபிட்டிய பகுதில் தாயிக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பதாக கூறி, மகனை பாடசாலையில் இணைத்துக்கொள்ள மறுத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# இன, பிரதேச வாதங்களால் தனி நபர்களுக்கு வெற்றி சமூகத்துக்கு கிடைப்பதோ தோல்வி - மன்னாரில் றிஷாத்

(சுஐப் எம்.காசிம்)

அரசியல்வாதிகள் சிலரின் கடந்த கால அரசியல் செயற்பாடுகளினாலேயே இனங்களுக்கிடையே பிரிவுகள் ஏற்பட்டு முரண்பாடுகளும் பிரச்சினைகளும் தோற்றுவிக்கப்பட்டதாக அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.மன்னார் மாவட்டத்தில் இளைஞர் கழகங்களின் மாவட்ட சம்மேளன நிர்வாகிகள் தெரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இன்று காலை இடம்பெற்ற போது அந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் கலந்து கொண்டார்.தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாகாணப் பணிப்பாளர் முனவ்வர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட இளைஞர் சேவைகள் அலுவலர் கிருபை ராஜா, மாவட்ட சம்மேளனத் தலைவர் விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அமைச்சர் இங்கு மேலும் கூறியதாவது,

இனவாதம், பிரதேசவாதம் மற்றும் மதவாதங்களால் குறிப்பிட்ட சிலரே வெற்றிபெறுகின்றனரே ஒழிய இதனால் சமூகம் தோல்வியைத்தான் சந்திக்கின்றது.

மண்ணுக்காக போராடுமாறு வழி காட்டிய அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக நமது தமிழ் இளைஞர்கள் கழுத்திலே சயனைட் குப்பிகளைக் கட்டிக் கொண்டு ஆயுதங்களைத் தூக்கி தமது உயிர்களை மாய்த்த வரலாறுகளை நாம் மீட்டுப் பார்க்கின்றோம்.அரசியல் தலைமைகளின் எழுச்சிக் கோஷங்களினாலும் வீரப் பிரதாபபேச்சுக்களினாலுமே நமது இளைஞர்கள் ஆயுத வழிக்குள் பிரவேசித்தனர். மன்னார் மாவட்ட இளஞர்கள் இதற்கு விதி விலக்காக இருக்கவில்லை. இந்த மாவட்டத்திலே பிறந்த விக்டர் போன்ற இளைஞர்கள் தமது உயிரை அநியாயமாக மாய்த்துள்ளனர்.

பிள்ளைகளைப் பெற்றெடுத்த எத்தனையோ தாய்மார்கள் அவர்களைப் பலி கொடுத்ததனால் நோயிலும் துன்பத்திலும் துவண்டு கொண்டிருக்கும் பரிதாப நிலையை நாம் காண்கின்றோம். யாரும் இல்லாத அநாதைகளாக அவர்கள் வாழ்கின்றனர். யுத்தம் நமக்கு விட்டுச்சென்ற வடுக்களும் வலிகளும் சொல்ல முடியாதவை. இந்து, கத்தோலிக்க, முஸ்லிம் என்ற பேதமின்றி வாழ்ந்த இந்த பிரதேச மக்களை அதை பிரித்து வைத்ததுடன் விரோதிகளாகவும் பார்க்க வைத்தது.

சமாதானம் ஏற்பட்டு மீண்டும் இன ஒற்றுமை தழைத்து வரும்போது இனவாதத்தை உசுப்பி பதவிக் கதிரையை தொடர்ந்தும் தக்கவைப்பதற்காக ஒரு சிலர் அலைகின்றனர்.யுத்தத்தினால் கை கால்களை இழந்த பலரின் பரிதவிப்புக்கள் வேதனை தருகின்றது. போராட்டத்தில் ஈடுபட்ட 15000 புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்ட போதும் அவர்களும் இன்னும் துன்பத்திலே தான் வாழ்கின்றனர்.




யுத்தம் முடிந்து அமைதி ஏற்பட்ட போது துன்பப்படுபவர்களுக்குக் கை கொடுக்க யாருமே அப்போது வரவில்லை. மீள்குடியேற்ற அமைச்சின் பொறுப்பு என்னிடமிருந்ததால் முட்கம்பியில் முடங்கிக் கிடந்தவர்களை மீண்டும் குடியேற்ற முடிந்தது.முல்லைத்தீவிலும் மன்னாரிலும் வவுனியாவிலும் தகர்ந்து கிடந்த கட்டடங்களையும் பாடசாலைகளையும் எம்மால் புனரமைக்க முடிந்தது. மீளக்குடியேறிய முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு மட்டும் 15000 வீடுகளை கட்டி வழங்கியுள்ளோம்.குளங்கள், பாலங்கள், காபட் வீதிகள் ஆகியவற்றை யாருமே நினைத்துப் பார்க்காத அளவில் மிகக்குறுகிய காலத்தில் அமைத்துக் கொடுத்தோம். மின்சாரம் இல்லாத இந்தப் பிரதேசத்தில் எல்லோருக்கும் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுத்தோம். எமக்குள் எந்தப் பிரிவினைகளும் இனி வரவே கூடாது. பிரச்சினைகளை பேசித்தீர்த்தால் முரண்பாடுகளும், சண்டைகளும் தொடராது. அதே போன்று பெரும்பான்மையாக வாழ்வோர் சிறுபான்மையினரின் கௌரவத்தை மதிப்பார்களாக இருந்தால், அவர்களை நிம்மதியாக வாழ்வதற்கு வழி விடுவார்களாயிருந்தால் நாட்டிலே சுபீட்சம் கிடைக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

## கால்வாயினை சீரமைப்பது தொடர்பில் நீர்ப்பாசனத்துறை அதிகாரிகள் நாச்சியாதீவுக்கு விஜயம்



(அபூ செய்னப் )

அமைச்சர் ஹக்கீமின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சாவின் பணிப்புரையில் நாச்சியாதீவில் 2010 ஆம் ஆண்டு வெட்டப்பட்டு சீரமைக்கப்படாமல் இருக்கின்ற மேலதிக கால்வாயினை (கொடவான்) பார்வையிட நீர்ப்பாசனத்துறையின் உயர் அதிகாரிகள் குழு கடந்த வெள்ளிக்கிழமை நாச்சியாதீவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு வெள்ள அனர்த்த காலத்தில் மேலதிக நீரினை வெளியேற்றும் நோக்கில் அப்போதைய அரசினால் கிராமத்தின் மத்தியினூடாக வெட்டப்பட்ட கால்வாயானது வெள்ளம் வடிந்த பின்னர் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. இந்நிலையில் மழைக் காலத்தில் கால்வாயின் இரண்டு ஓரங்களும் மண்ணரிப்பினால் பாதிப்படைந்து பொது மக்களின் போக்குவரத்து பாதையானது சிதைவடைந்து பாதுகாப்பற்று காணப்படுகின்றது.

இது தொடர்பில் நாச்சியாதீவு ஜூம்ஆ பள்ளிவாசல் நிருவாகத்தினர் மற்றும் அரசியல் தலைமைகள் பலதடவைகள் முயற்சி எடுத்தும் எதுவும் பலனளிக்காத நிலையில் அண்மையில் அனுராதபுரத்திற்கு விஜயம் மேற்கொண்ட நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நீர்ப்பாசனத்துறை மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் விஜித விஜய முனி சொய்சா பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் அண்மையில் சந்தித்த போது இந்த விடயம் தொடர்பில் அவருக்கு விளக்கமளித்தார். அமைச்சர் ஹக்கீமின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சாவின் நீர்ப்பாசனத்துறையின் உயர் அதிகாரிகள் குழு கடந்த வெள்ளிக்கிழமை கால்வாயை பார்வையிடவும் அதற்கான நிரந்தரமான தீர்வினை முன்மொழியவும் நாச்சியாதீவுக்கு சென்றனர். கால்வாயின் இரண்டு ஓரங்களும் கட்டப்படாமையினால் பொதுமக்கள் அங்கு எதிர்நோக்கும் அசௌகரியம் பற்றி பாதிக்கப்பட்ட கிராமவாசிகளினால் அங்கு விளக்கப்பட்டது.

## விளையாட்டு வீரரிடம் நல்லொழுக்கமும் நற்பண்புமிருந்தால் சமூக அந்தஸ்து

### மாகாண சபை உறுப்பினர் கே.எம்.அப்துல் றஸாக்

(மருதமுனை நிருபர்)

விளையாட்டின் மூலம் ஐக்கியத்தையும்,ஆரோக்கியத்தையும் கட்டியெழுப்ப முடியும். அதற்கு ஒவ்வொரு விளையாட்டு வீரரிடமும் நல்லொழுக்கமும், நற்பண்பும் நிறைந்திருக்க இருக்க வேண்டும்.அப்போதுதான் ஒருவர் சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.அப்துல் றஸாக் தெரிவித்தார்.

மருதமுனை மருதம் விளையாட்டுக் கழகம் நடாத்திய உதைபந்தாட்ட ஆரம்ப போட்டியும்,பரிசளிப்பு நிகழ்வும் வெள்ளிக்கிழமை மாலை(17-03-2017) மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுத் தொகுதியில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கழகத்தின் தலைவர் எம்.ஏ.எம். முஸ்தாக் அபூபக்கர்,தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாக சறோ பாம் பிறைவெட் லிமிட்டட் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எச். எம்.தாஜூதீன் கலந்து கொண்டார். விஷேட அதிதியாக அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஏ.எம்.இப்றாகீம் (மெரிகோல்ட்) கலந்து கொண்டார்.

இங்கு பிரதம அதிதி றஸாக் மேலும் உரையாற்றுகையில்,

இன்று ஆரம்பமாகியிருக்கின்ற மருதம் விளையாட்டுக்கழகம் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி விளையாட்டுத் துறையில் உயர்ந்து நிற்க வேண்டும் மருதமுனை மண் எல்லாத் துறையிலும் உயர்ந்த நிற்பது மன மகிழ்ச்சியைத் தருகின்றது என்றார்.

இங்கு சிரேஷ்ட, கனிஷ்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய கழகங்களுக்கும், வீரர்களுக்கும் பிரதம,கௌரவ அதிதிகளால் கிண்ணங்கள் வழங்கப்பட்டதுடன் பார்வையாளர்களுக்கு நடாத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கும் அதிதிகளால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## இரத்தினபுரி பர்கஸனின் நூற்றாண்டு விழா

(இரத்தினபுரி எம்.எல்.எஸ்.முஹம்மத்)

இரத்தினபுரி பர்கஸன் உயர் பாடசாலையின் நூற்றாண்டு விழா மார்ச் 27 முதல் 31 வரை ஐந்து நாட்களுக்கு பாடசாலை வளாகத்தில் அதிபர் மேஷி கலகம தலைமையில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகவும் , கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் உட்பட இரத்தினபுரி மாவட்ட அமைச்சர்கள் மற்றும் பிரதேச அரசியல் பிரமுகர்கள் அனைவரும் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

1917ஆம் ஆண்டு கிறிஸ்தவ மிஷனரி ஆங்கில மொழிப் பாடசாலையாக மூன்று மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று 5000 இற்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு மும்மொழிகளிலும் கல்வியை வழங்கி வரும் மிகச் சிறப்பான பாடசாலையாக விளங்கி வருகிறது. பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெறவுள்ள ஐந்து நாட்கள் நிகழ்வில் பாடசாலையின் கல்விக் கண்காட்சிகள் மற்றும் வர்த்தக சந்தைகளும் இடம்பெறவுள்ளன.மேற்படி பாடசாலையில் தமிழ் மொழிப் பிரிவு தரம் 1 முதல் 5 வரை மாத்திரமே இடம்பெற்று வருவதாக பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் எம்.எல்.எஸ்.முஹம்மத் தெரிவித்தார்.

## கிண்ணியா பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்




(கிண்ணியா ஸஹ்றின் எம். இஸ்மத், திருமலை எம்.டி.எம். பாரீஸ் )

டெங்கு காய்ச்சல் தாக்கம் காரணமாக கடந்த வாரம் மூன்று தினங்களுக்கு கிண்ணியாவில் மூடப்பட்ட 66 பாடசாலைகளும் நேற்று திங்கள் மீண்டும் திறக்கப்பட்டு வழமை போல் கல்வி நடவடிக்கைகள் இடம்பெற்றன.

மாணவர்களின் வரவில் வீழ்ச்சி காணப்பட்டாலும் ஆசிரியர்களின் வரவில் சற்று முன்னேற்றம் காணப்பட்டது. இதேவேளை கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். அகமட் லெப்பை பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வரவை அதிபர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும் கிண்ணியா கல்வி வலயத்தில் உள்ள 66 பாடசாலைகளுக்கும் தலா 10 பேர் அடங்கிய பொலிஸார் குழுவினர் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

## முன்னாள் அதிபர் ஹனீபா காலமானார்

(பைசல் இஸ்மாயில்)



அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபருமான வீ.ரி. எம்.ஹனீபா மௌலவி (ஸர்க்கி) கடந்த 17 ஆம் திகதி காலமானார். இவருக்கு ஐந்து பெண் பிள்ளைகளும், ஒரு ஆண் மகனும் உள்ளனர்.

சட்ட உதவி ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பொறுப்பாளரான சட்டத்தரணி எம்.எச்.ஹஸான் றுஸ்தியின் தந்தையுமாவார். ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ், ஆசிரியர் கியாஸ் மற்றும் அஜ்ஹான் ஆகியோரின் உறவினராவார்.

நியாஸ்(நளிமி), ஆசிரியர் அபாஹூல்பான், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை உத்தியோகத்தர் பைசல் ஆகியோரின் மாமனாருமாவார். அவருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்க பிரார்த்திப்போம்.





மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையின் சுற்றாடல் முன்னோடிக் குழு, பச்சை வர்ணக் குழு ஆகியவற்றுக்கு பதக்கம் அணிவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மாவனல்லை கல்விப் பணிமனை அதிகாரி பி.டபில்யு.டீ.யூ.பிடவலகே மாணவியொருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் பதக்கம் பெற்ற ஆண், பெண் மாணவர்கள் குழுவினரையும், பாடசாலை அதிபர் எம்.எம்.ஜவாட், உப அதிபர் எம்.ஐ.எம்.ஸியாத், உதவி அதிபர் ஏ.ஏ.டீ.ஹஸ்னா, சுற்றாடல் பொறுப்பாசிரியை எம்.எல்.எஸ். மாஹிரா, முன்னாள் ஆரம்பப் பிரிவு அதிபர் எம்.இஸட்.எம்.அய்யூப், உதவி அதிபர் ஸீனா யாஸ்மீன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## திருடர்கள் மூவர் நீர்கொழும்பில் கைது

(மினுவாங்கொடை நிருபர் )

திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களை, பமுனுகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட இச் சந்தேக நபர்களிடமிருந்து, நான்கு கிராம் தங்கச் சங்கிலி, ஏழு கிராம் தங்கத்தோடு உள்ளிட்ட இக் கொள்ளைச் சம்பவங்களுக்காகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் முச்சக்கர வண்டி ஒன்றையும் பமுனுகம பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும், வத்தளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, பிரதான சந்தேக நபரை, இம்மாதம் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும், ஏனைய இரு சந்தேக நபர்களையும் பிணையில் விடுதலை செய்யுமாறும், வத்தளை பிரதான நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# அன்ஸிலுக்கு உதித்த காலம் கடந்த ஞானம்

**அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ. அன்சில் நேற்றைய பத்திரிகையில் வெளியிட்டிருந்த கட்டுரைக்கான பதில் கட்டுரை**



- முகம்மது இத்ரீஸ் இயாஸ்தீன்,
மருதமுனை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்த சிலரின் அதிகாரங்கள் கைமாறிப் போனதால் அவர்களுடைய வாரிசுகளும் கட்சியுடன் முரண்பட்ட இன்னும் சிலரும் சேர்ந்து கட்சித் தலைமை கிழக்கு மாகாணத்துக்கு வேண்டும் என்ற தோரணையில் கிழக்கின் எழுச்சி என்ற கோசத்தை ஆரம்பித்தனர். அந்தக் கோசம் பிசுபிசுத்துப்போனதால் வந்த வேகத்திலேயே காணாமல்போனது. இந்நிலையில் பஷீர் சேகுதாவூதும் ஹஸன் அலியும் கட்சித் தலைவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இவர்கள் இருவரும் கட்சியை தூய்மைப்படுத்தப்போகிறோம் என்ற தோரணையிலேயே தங்களது எதிர்ப்பு பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர். தேசியப்பட்டியல் கிடைக்காத காரணத்தினால் பஷீர் சேகுதாவூதும், செயலாளர் பதவியும் தேசியப்பட்டியலும், அமைச்சுப் பொறுப்பும் கிடைக்காத காரணத்தினால் ஹஸன் அலியும் தற்போது கட்சிக்கு எதிராக பிரசாரம் செய்துவருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த வெளிப்படையான உண்மை. ஆனால், இவர்கள் இருவரும் இதன்மூலம் அடையவிருக்கும் எதிர்பார்ப்புகள் வெவ்வேறாக இருக்கின்றன.

ஹஸன் அலி இவ்வாறு பேசுவதில் நியாயம் இருக்கிறது. அதை சிலர் பகடையாக வைத்து தங்களது அரசியல் நடவடிக்கைளை மேற்கொள்வதாக நிந்தவூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தார். ஹஸன் அலியின் பதவிகள் பறிக்கப்பட்டதால் அவர் மனவேதனையுடன் இருப்பதை ஹக்கீம் மனதார ஏற்றுக்கொண்டுள்ளார். கட்டாய உயர்பீடக் கூட்டத்தின்போது ரவூப் ஹக்கீமை தலைவராக பிரேரித்த ஹஸன் அலி, நிந்தவூர் கூட்டத்தில் அதனை ஆமோதித்திருந்தார்.

இதுவெல்லாம் இருக்கட்டும், அட்டாளைச்சேனை முன்னாள் தவிசாளர் எம்.ஏ. அன்ஸில் ஏன் ஹஸன் அலியுடன் சேர்ந்து கட்சித் தலைமையை வசைபாடவேண்டும் என்று நிறையப் பேருக்கு சந்தேகம் இருப்பது நியாயமே. ஹஸன் அலியும், பஷீரும் பதவி பறிபோனதால் பேசுகிறார்கள். ஆனால், அன்ஸிலுக்கு அப்படியொரு தேவையில்லாத காரணத்தினால், அவர் பேசுவது உண்மையாக இருக்குமா என்று மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை அவர் தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முயன்று வருகிறார்.

பஷீருடன் சேர்ந்து போராட்டத்தில் குதித்தால் மக்கள் ஆதரவு கிடைக்காது என்ற காரணத்தினால், ஹஸன் அலியுடன் சேர்ந்து அன்ஸிலும் மேடையேறியுள்ளார். கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் எந்த நோக்கத்துக்காக கட்சியை ஆரம்பித்தாரோ, அந்த நோக்கம் இப்போது தூரமாக்கப்பட்டுள்ளதால் ரவூப் ஹக்கீமுடன் முரண்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக அன்ஸில் இப்போது தெரிவிக்கிறார்.

அன்ஸிலின் பார்வையில், கடந்த வருடம் வரை மக்கள் நலனுக்காக பயணித்த கட்சி, இன்று பிழையான வழியில் பயணிக்கிறதா? பிழையான வழியில் பயணிப்பதை உணர்வதற்கு இவ்வளவு காலம் எடுத்தது ஏன்? கட்சியும் அதன் தலைமைத்துவமும் பிழையான வழியில் செல்வதாக நீங்கள் உணர்ந்திருந்தால், அப்போதே இவற்றை போட்டுடைத்திருக்க வேண்டுமே. பல வருடங்களாக கட்சியின் உயர்பீடத்தில் இருந்துகொண்டு வக்காலத்து வாங்கிக் கொண்டிருந்த நீங்கள், இன்று கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வதன் மர்மம்தான் என்ன?

கடந்த வருடம் பாலமுனையில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டை நடாத்தும் பொறுப்பு முழுக்க முழுக்க உங்களிடமே ஒப்படைக்கப்பட்டது. அதற்காக கோடிக்கணக்கான ரூபா பணம் கட்சியினால் வழங்கப்பட்டது. அதனை நீங்கள் சிறப்பான முறையில் நடாத்தி முடித்தீர்கள். இன்று நீங்கள் யாருக்காக பேசுகின்றீர்களோ, அந்த ஹஸன் அலி அன்றைய மாநாட்டுக்கு வந்திருக்கவில்லை. அதனை நீங்கள் அன்று பார்த்த விதம் வேறு, இன்று பார்க்கும் விதம் வேறு.

பாலமுனை தேசிய மாநாட்டின் பின்னர் மறுநாள் நடைபெற்ற கூட்டமொன்றில், கட்சியில் அனுகூலங்களை அனுபவித்தவர்கள், அதிகாரங்களை அனுபவித்தவர்களுக்கு 15 வருடங்களாக இல்லாதிருந்த பிரச்சினை இப்போது வருகிறதென்றால், அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பது மாத்திரம்தான் காரணம் என்று கட்சிக்குள்ளே இருக்கின்ற என் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று அன்ஸில் தனதுரையில் தெரிவித்திருந்தார்.

தேசியப்பட்டியல் கிடைக்காத காரணத்தினால்தான் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு என்ற எண்ணக்கரு பிறந்திருப்பதாக பேசிய அன்ஸில், பஷீரையும் ஹஸன் அலியை கடுமையாக சாடிப் பேசினார். தலைவர் எடுக்கின்ற தீர்மானங்கள் அவர்களுக்கு சாதகமாக இல்லையென்றால், தலைவரை ஒரு சர்வாதிகாரப் போக்குடையவர்களாக பார்ப்பதாக அன்ஸில் தனதுரையில் அவர்களிடம் பிழையிருப்பதை மேடையில் பகிரங்கமாக தெரிவித்திருந்தார். அதே பிழையைத்தான் இன்று அவர் செய்துகொண்டிருக்கிறார்.

இவ்வாறு கடந்த வருடம் வரை தலைவருக்கு வக்காலத்து வாங்கிய அன்ஸில், இன்று ஞானம் உதித்தவர்போல அந்தர் பல்டி அடிப்பதன் பின்னணி நிறையப் பேருக்கு தெரியாதுள்ளது. அன்றைய கூட்டத்தில் ஹஸன் அலியையும், பஷீரையும் வசைபாடியவர், இன்று ஹஸன் அலிக்காக பரிந்து பேசுகின்ற நிலைக்கு ஆளாகியுள்ளார். அதேநேரம், அன்று பஷீருக்கு எதிராக பேசியவர், இன்று ஒரு வார்த்தைகூட அவருக்கு எதிராக பேசவில்லை. இதன் மூலம் அவர் பஷீரை எதிரியாக பார்க்கவில்லை என்பதை யூகித்துக்கொள்ளலாம்.

பஷீர் சேகுதாவூதை தவிசாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தும் தீர்மானம் உயர்பீடக் கூட்டத்தில் எடுக்கப்பட்டபோது, அன்ஸில் கையை உயர்த்தி ஆதரவு தெரிவிக்காமல் இருந்தார். அப்போது தலைவர் ரவூப் ஹக்கீம், அன்ஸின் பெயரைக்கூறி பஷீரை இடைநிறுத்துவதில் உங்களுக்கு உடன்பாடு இருக்கிறதா என்று கேட்டபோதுதான் அன்ஸில் வேறு வழியின்றி எல்லோரும்போல கையை உயர்த்தினார். இதன்மூலம் பஷீருக்குக்கும் தனக்கும் இருந்த நெருக்கத்தை அவராகவே சபையில் ஒப்புவித்திருந்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது முஸ்லிம் காங்கிரஸ் யாரை ஆதரிப்பது என்ற திண்டாட்டத்தில் இருந்தமைக்கான காரணம் அன்ஸிலுக்கு நன்றாகவே தெரியும். கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் கட்சியை இரண்டாக பிளந்து ஒரு அணியை மஹிந்த பக்கம் இழுத்துச் செல்வதற்கு ஆயத்தமாக இருந்தார். அதற்காக கோடிக்கணக்கில் பேரமும் பேசப்பட்டது. ஆனால், மக்களோ மைத்திரியின் பக்கம் நின்றனர். ஒரு தடவைகூட மஹிந்தவை ஆதரிக்காத கட்சித் தலைமை, கட்சியையும் பிளவுபடாமல் காப்பாற்றவேண்டும், அதேவேளை மக்கள் கருத்துக்கும் மதிப்பளிக்கவும் வேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில், கட்சித் தலைமை எடுத்த சாணக்கிய முடிவினால் இறுதிக் கட்டத்திலாவது மைத்திரியின் பக்கம் கட்சியில் சேதாரமில்லாமல் கொண்டுவந்து சேர்க்கப்பட்டது. ஆனால், அப்போதும் ஒருசிலர் இந்த முடிவை ஏற்றுக்கொள்ளாமல், கோபித்துக்கொண்டு தேர்தலில் யாருக்கும் வாக்களிக்காமல் தனது வாக்குரிமையை பகிஷ்கரித்தனர். அவர்தான் இந்த இழுபறிக்கு காரணம் என்பது அன்ஸிலுக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும்.

கட்சிக்கு வாக்களித்த தாய்மார்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு அவர்களின் காலடிக்குச் சென்று தலைவர் சேவையாற்றுவதாக கடந்த வருடம் பாலமுனையில் பேசிய அன்ஸில், இன்று அதே பாலமுனையில் வைத்து பேசும்போது, கட்சிக்கு வாக்களித்ததால் பெண்களின் கற்புகள் பறிக்கப்படுவதாக கூறுகிறார். அது உண்மையாக இருந்தால் கடந்த வருடமே அதை கூறியிருக்க வேண்டுமே. ஏன், இந்த வருடம் கூறவேண்டுமா? கூடவே இருக்கும்வரை நல்லவர்களாக துதித்துவிட்டு, வெளியே வந்து அவர்களை மோசமாக வசைபாடுகின்ற அரசியல் பாங்கு அன்ஸிலையும் விட்டு வைக்கவில்லை போலும்.

அவர் குற்றம்சாட்டிய அரசியல்வாதி, அண்மையில் கண்டி ஓக்ரே ஹோட்டலில் நடைபெற்ற மு.கா. செயலமர்வில் தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அபாண்டமானவை என்றும் அதில் எவ்வித உண்மையும் இல்லையென்றும் தலைவர் முன்னால் பகிரங்கமாக எடுத்துக் கூறினார். அப்போது அங்கே பிரசன்னமாயிருந்த அன்ஸில், அவரது கருத்துக்கு ஏன் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. அவர் கூறுவது பிழையென்று சுட்டிக்காட்டாமைக்கான காரணம் என்ன? அப்போது ஏன் (கள்ள) மௌனம் சாதித்தீர்கள்?

ஹஸன் அலியின் செயலாளர் பதவி பறிக்கப்பட்டதற்காக போராடவில்லை என்று கூறும் அன்ஸில், அதேநேரம், அவருக்கும் என்னைப்போலவே அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கூறி அதற்காகத்தான் போராடுகிறேன் என்பதை அவராகவே ஒப்புக்கொள்கிறார். கட்சியை ஒரே திசையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துக்காத்தான் தலைவர் செயலாளரை மாற்றினார். மர்ஹூம் அஷ்ரப் தலைவராக இருந்த காலத்தில்கூட, செயலாளராக இருந்த ரவூப் ஹக்கீமை தனது விருப்பத்துக்காக அந்த பதவியிலிருந்து அஷ்ரப் மாற்றினார். அப்போது அதை சரிகண்டவர்கள், இன்று இதை பிழைகாண்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

ஹஸன் அலியின் பிரச்சினை வேறு, அன்ஸிலின் பிரச்சினை வேறு. பஷீர் சேகுதாவூதுக்கு இருக்கின்ற கட்சித் தலைமையை மாற்றவேண்டும் என்ற கோரிக்கைதான் அன்ஸிலிடமும் இருக்கின்றது என்பது அவரது பேச்சிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. அதுமட்டுமல்லாமல், ஏறாவூரில் பாரிய அரசியல் பலத்துடன் இருக்கும் கிழக்கு முதலமைச்சரை வசைபாடும் பஷீரின் கொள்கையும் அன்ஸிலிடம் இல்லாமலில்லை. பஷீரை எந்த இடத்திலும் விட்டுக்கொடுக்காத நிலையிலேயே அன்ஸிலின் இன்றைய செயற்பாடுகள் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது அவர் மீதான சந்தேகத்தை மேலும் வலுக்கச் செய்கிறது.

இரு மாதங்களுக்குள் விசேட பேராளர் மாநாட்டை நடாத்தி, தனக்குரிய செயலாளர் பதவியை தரவேண்டும் என்று ஹஸன் அலி பொத்துவில் கூட்டத்தில் வைத்து தலைவருக்கு காலக்கெடு விதித்துள்ளார். அதேவேளை, தலைவரிடமிருந்து கட்சியை மீட்டெடுக்கும் வரை ஓயப்போவதில்லை என்ற அன்ஸில் பாலமுனை கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இருவரும் ஒரே மேடையில் பேசித்திரிந்தாலும் இருவரும் வெவ்வேறு நிகழ்ச்சிநிரலின் கீழ் செயற்படுகின்றார்கள் என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகின்றது. இப்படி சுயநலத்துக்காக போராடுபவர்களை மக்கள் எப்படி நம்புவார்கள்?

ஒருவேளை, ஹஸன் அலிக்குரிய பதவிகள் வழங்கப்பட்டால் அவர் வழமைபோல கட்சித் தலைமையுடன் இணைந்துகொண்டு அவருடைய பாதையில் சென்று விடுவார். கடைசியில் அன்ஸில் அணியினர் தனிமைப்படுத்தப்பட்டு விடுவார்கள். இதனால், எப்படியாவது ஹஸன் அலி - ஹக்கீம் முறுகலை ஸ்திரநிலையில் வைத்திருக்கவேண்டும் என்பதில் அவர் சிரத்தையெடுப்பது தெளிவாகப் புரிகின்றது. அதுமட்டுமல்லாமல், பஷீர் சேகுதாவூதின் எண்ணக்கருவான முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புக்குள் ஹஸன் அலியை இழுத்துச் செல்லும் திட்டத்தையும் திரைமறைவில் அவர் அரங்கேற்றுவதாக சொல்லப்படுகிறது.

மஹிந்தவுடன் இணைந்து போட்டியிடவேண்டும் இல்லாவிட்டால் கட்சிக்கு எதிராக 17 கூட்டங்களை நடாத்தப்போவதாக கடந்த மாகாணசபைத் தேர்தலின்போது பஷீர் சேகுதாவூத் சவால் விட்டிருந்ததார். அவருடைய முதலாவது கூட்டமே பிசுபிசுத்துப்போன காரணத்தினால் அந்த திட்டம் கைவிடப்பட்டது. அதுபோல, இன்று அன்ஸில் அணியினர் கட்சித் தலைமைக்கு எதிராக 16 கூட்டங்களை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். அதற்காக ஒலிபெருக்கி வழங்குநரும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் இந்தக் கூட்டங்களை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். இருந்தாலும் கடந்த வெள்ளிக்கிழமை இக்கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறவில்லை. பொத்துவில் கூட்டத்துக்கு மக்கள் செல்வாக்கு இல்லாததும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், தவிர்க்க முடியாத காரணங்களினால் கடைசிக் கூட்டம் பிற்போடப்பட்டதாகவும், தற்போது அம்பாறை மாவட்ட உலமா சபையுடன் பேசி வருவதாகவும் ஹஸன் அலி தெரிவித்துள்ளார். இந்நிலையில் அவர்கள் எதிர்பார்க்கும் மக்கள் செல்வாக்கு கிடைக்காத காரணத்தினால், அடுத்த வெள்ளிக்கிழமையாவது கூட்டம் நடைபெறுமா என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

நிந்தவூரில் நடைபெற்ற கூட்டத்துக்கு பெருமளவான பார்வையாளர்கள் வந்திருந்தனர். ஹஸன் அலி கட்சிக்கு எதிராக பேசப்போகிறார், தலைவரை வெளியேற்றுவதற்காக பேசப்போகிறார் என்றே அங்கிருந்தவர்கள் காத்துக் கொண்டிருந்தனர். ஏனெனில், அங்கிருந்தவர்களில் அதிகமானோர் மாற்றுக் கட்சிக்காரர்கள், முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர்கள். இந்நிலையில், தலைவர் ரவூப் ஹக்கீம்தான் என்று ஹஸன் அலி மேடையில் பேசியபோது, கூட்டத்தை பார்க்கவந்தவர்கள் கூச்சலிட்டனர். கடைசிவரை அவர்கள் எதிர்பார்த்தது நடக்காத காரணத்தினால் தூரத்திலிருந்து வந்தவர்கள் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றார்கள்.

இந்நிலையில், இந்தக் கூட்டத்தின் உண்மைத்தன்மை புரிந்துகொண்டதால் பொத்துவிலில் நடைபெற்ற கூட்டத்துக்கு அப்படியொரு சனக்கூட்டம் வரவில்லை. இங்கிருந்து நிறையப்பேர் கொண்டு செல்லப்பட்டார்கள். அண்மையில் நடைபெற்ற பொத்துவில் கூட்டத்தின் ஹஸன் அலியின் இறுதிக்கட்ட உரையின்போது குறுக்கிட்ட ஒரு பார்வையாளர், ரவூப் ஹக்கீமும் எங்களை ஏமாற்றுகிறார். நீங்களும் பொய் சொல்லி எங்களை ஏமாற்றுகிறீர்கள். உங்களது தேவைக்காக எங்களை பயன்படுத்த வேண்டாம் என்று பகிரங்கமாகவே கூறியிருந்தார். இதனால் மேடையில் பேசிய அவருக்கு தர்மசங்கட நிலை ஏற்பட்டது.

ஹஸன் அலி பேசும்போது ஒரு பொதுமகன் அவருக்கு எதிராக பேசியதால் அங்கும் அவர்கள் எதிர்பார்த்த அடைவை அடைய முடியவில்லை கொடுக்கவில்லை. அத்துடன் எதிர்பார்த்த மக்கள் கூட்டமும் வரவில்லை. தங்களது கூட்டங்களுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை என்பதை அவர்கள் ஒவ்வொரு கூட்டமாக நடத்தும்போது உணர ஆரம்பித்துள்ளார்கள். இப்படியே போனால், மாற்றுக் கட்சிக்காரர்களை வைத்துக்கொண்டுதான் இந்தக் கூட்டங்களை நடத்த வேண்டியேற்படும். ஏதொவொன்று கிடைக்காத காரணத்தினால்தான் இவர்கள் ஊர் ஊராக மேடைபோட்டு பேசித்திரிகிறார்கள் என்பதை மக்கள் தெளிவாக புரிந்துவைத்துள்ளார்கள்.

ரவூப் ஹக்கீமுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பாலமுனையில் தேசிய மாநாட்டை நடாத்துவதற்கு பயன்படுத்திய மேடை மற்றும் கொடிகளை இன்று அவரை தூற்றுவதற்காக அன்ஸில் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். கட்சியை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு நீங்கள் வெளியேறுங்கள் என்று பேசிக்கொண்டிருக்கிறார். இதன்மூலம் அவர் எந்தப் பின்புலத்தில் செயற்படுகிறார் என்பதை நீங்களாகவே ஊகித்துக் கொள்ள முடியும்.





# மத்திய தரைகடலில் தத்தளித்த அகதிகள் 3000 பேர் மீட்பு



லிபியாவிலிருந்து மத்திய தரைக்கடல் வழியாக ரப்பர் படகுகள் மூலம் ஐரோப்பாவுக்குள் ஊடுருவ முயன்ற சுமார் மூவாயிரம் குடியேறிகளை மீட்டுள்ளதாக இத்தாலிய கடலோரக் காவல் படையினர், தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், ரப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர்கதையாகிவருகிறது. சமீப காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 25 இலட்சத்தை எட்டியுள்ளது.

இதுதவிர, கடந்த ஆண்டில் மட்டும் இத்தாலிக்கு புகலிடம் தேடி வரும் வழியில் சுமார் ஐயாயிரம் பேர் காணாமல் போனதாகவும், கடலில் மூழ்கி இறந்துவிட்டதாகவும் தெரிகின்றது. இருப்பினும், உள்நாட்டில் பசி, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள லிபியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் இன்றும் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக படையெடுத்தபடியாகவே உள்ளனர்.

அன்காரா நாட்டு கடல் எல்லை வழியாக கிரீஸ் நாட்டுக்குள் நுழைந்து விடாமல் அங்கிருந்து பிரான்ஸ், ஜெர்மன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று அங்கே அகதிகளாக குடியேறி விடலாம் என்பது இவர்களின் விருப்பமாக உள்ளது.

எனவே, ரத்தத்தை உறையவைக்கும் குளிர் காற்று, பசியால் அலையும் சுறா, திமிங்கலம் உள்ளிட்ட ராட்சத மீன்களின் தாக்குதல் மற்றும் பேரலைகளுக்கு மத்தியில் தங்களது உயிரைப் பணயம் வைத்து இவர்கள் ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை சுமார் இரண்டு இலட்சம் குடியேறிகள் ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டத்துக்கு புறம்பாக நுழைந்துள்ளனர். இவர்களில் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் துருக்கி வழியாக வந்துள்ளனர். கடல் பயணத்தின்போது நிகழ்ந்த எதிர்பாராத விபத்துகளில் சிக்கி மூன்றாயிரத்துக்கும் அதிகமானோர் கடந்த ஒன்பது மாதங்களில் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மட்டும் மத்திய தரைக்கடல் வழியாக 22 ரப்பர் படகுகள், இரு இயந்திரப் படகுகள் மூலம் இத்தாலி கடல் எல்லையை கடக்க முயன்ற சுமார் 3000 பேரை இத்தாலி கடலோரக் காவல் படையினர் மிலன் நகரை ஒட்டியுள்ள கடல்பகுதியில் தடுத்து நிறுத்தி மீட்டுள்ளனர்.

இதைப்போன்ற ஆபத்தான கடல் பயணங்களின் மூலம் கடந்த ஆண்டுவரை பலியானவர்களின் எண்ணிக்கை சுமார் ஐயாயிரமாக உயர்ந்துள்ள நிலையில், மத்திய தரைக்கடல் பகுதியில் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் சுமார் 12 ஆயிரம் குடியேறிகளை தங்கள் நாட்டு கடற்படையினர் மீட்டுள்ளதாக இத்தாலி அரசு தெரிவித்துள்ளது.

# டிரம்ப் – சிசி ஏப். 3இல் சந்திப்பு



அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பை சந்தித்து பேசுவதற்காக எகிப்து ஜனாதிபதி அப்துல் பதாஹ் அல் - சிசி வொஷிங்டனுக்கு ஏப்ரல் 3ஆம் திகதி வரவுள்ளதாக வெள்ளை மாளிகை நேற்று அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று பொறுப்பேற்று கொண்ட டிரம்ப்பை பல நாட்டு தலைவர்கள் வரிசையாக சந்தித்து வருகின்றனர். அவ்வகையில், வரும் ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி எகிப்து ஜனாதிபதி அப்துல் பதாஹ் அல் - சிசி - டொனால்ட் டிரம்ப் ஆகியோர் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என வெள்ளை மாளிகை இன்று உறுதிபடுத்தியுள்ளது.

எகிப்து முன்னாள் ஜனாதிபதியாக இருந்த முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் தலைவர் முஹம்மது முர்ஸி கடந்த 2014ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தோல்வியடைந்ததையடுத்து எகிப்து ஜனாதிபதியாக பொறுப்பேற்று கொண்ட அப்துல் பதாஹ் அல் - சிசிக்கும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் இடையில் சமீபகாலமாக மோதல் போக்கு நிலவி வந்தது.

இந்நிலையில், ஒபாமாவின் கொள்கைகளுக்கு மாற்றான பாதையில் அமெரிக்க அரசை வழிநடத்திவரும் டிரம்ப் - அப்துல் பதாஹ் அல் - சிசி இடையே அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்த பேச்சு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ‘இரட்டை இலை’யை பெற சசி – ஓ.பி.எஸ். கடும் முயற்சி



ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.கவின் அதிகாரப்பூர்வ சின்னமான இரட்டை இலையை பெறுவதற்காக சசிகலா மற்றும் ஓ.பன்னீர் செல்வம் அணியினர் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

ஜெயலலிதா மரணத்தை தொடர்ந்து அ.தி.மு.க. நிர்வாகிகள் சசிகலா தலைமையிலும், ஓ.பன்னீர் செல்வம் தலைமையிலும் இரு பிரிவுகளாக செயற்பட்டு வருகிறார்கள்.

இரு அணியினரும் இரட்டை இலை சின்னத்தை கைப்பற்றுவதில் தீவிரமாக உள்ளனர்.

ஆர்.கே.நகர் தொகுதியில் சசிகலா அணியும், ஓ.பன்னீர் செல்வம் அணியும் நேருக்கு நேராக முதல் முறையாக பலப்பரீட்சை நடத்துகின்றனர். அவர்களுக்கு இரட்டை இலை சின்னம்தான் பலம் பொருந்தியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதை கருத்தில் கொண்டு இரட்டை இலை சின்னத்தை தங்கள் தரப்புக்கு ஒதுக்கி தர வேண்டும் என்று கடந்த 17ஆம் திகதி தலைமை தேர்தல் ஆணையத்தில் ஓ.பன்னீர்செல்வம் அணியினர் மனு கொடுத்தனர். அதை ஏற்றுக்கொண்ட தேர்தல் ஆணையம் இது தொடர்பாக 20ஆம் திகதிக்குள் பதில் அளிக்குமாறு சசிகலா அணிக்கு நோட்டீஸ் அனுப்பியது.

இதையடுத்து சசிகலா தரப்பினர் பதில் மனு தாக்கல் செய்ய தயாராகி வருகிறார்கள். அவர்கள் 21ஆம் திகதி மாலை வரை பதிலளிக்க தேர்தல் ஆணையத்திடம் அவகாசம் பெற்றுள்ளனர்.

சசிகலா தரப்பினர் தங்களது பதிலை அ.தி.மு.க.வின் மூத்த நிர்வாகி மூலமாகவோ அல்லது வக்கீல் மூலமாகவோ தாக்கல் செய்யலாம் என்று தலைமை தேர்தல் கமிஷன் அறிவுறுத்தியுள்ளது. இதையடுத்து சசிகலா தரப்பினர் இன்று இரவுக்குள் தங்கள் பதில் மனுவுக்கு இறுதி வடிவம் கொடுக்கவுள்ளனர். இன்று (செவ்வாய்க்கிழமை) அவர்கள் டில்லி தலைமை தேர்தல் ஆணையகத்தில் பதில் கடிதம் கொடுக்க திட்டமிட்டுள்ளனர்.

சசிகலா அணியினர் அளிக்கும் பதிலை படித்து ஆய்வு செய்யும் தலைமை தேர்தல் ஆணையகம், அடுத்த கட்ட நடவடிக்கையை உடனே மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

அதன்படி சசிகலா தரப்பினரையும், ஓ.பன்னீர்செல்வம் தரப்பினரையும் நாளை (22ஆம் திகதி) நேரில் வந்து ஆஜராகுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அன்று இரு தரப்பினரிடமும் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளது.

இதன்படி அ.தி.மு.க. கட்சி விதிகள் பற்றியும், தற்போதைய நடைமுறைகள் பற்றியும் அதிகாரிகள் தங்களுக்குள் விவாதிப்பார்கள். அதன் அடிப்படையில் 22ஆம் திகதி மாலை தேர்தல் ஆணையகம் தனது முடிவை வெளியிட திட்டமிட்டுள்ளது. ஆர்.கே.நகர் தொகுதியில் 23ஆம் திகதி மனுதாக்கல் முடிவதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# அதிக உந்து சக்தி கொண்ட ரொக்கெட் என்ஜினை பரிசோதித்த வடகொரியா

## உலக நாடுகள் அதிர்ச்சி



நான்கு முறை அணுகுண்டு சோதனை நடத்திய வடகொரியா, அதிக உந்துசக்தி கொண்ட ரொக்கெட் சோதனையை நடத்தி உலக நாடுகளை அதிர்சியடைய செய்துள்ளது.

உலகநாடுகளின் கடும் எதிர்ப்பு, அமெரிக்கா போன்ற நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடை ஆகியவற்றிற்கு மத்தியில் வடகொரியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அண்டை நாடான தென்கொரியாவிற்கு தொடர் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் வடகொரியா, ரொக்கெட் எஞ்சின் சோதனையை நடத்தியிருப்பது அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளை கடும் ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளது.

அந்நாட்டின் டொம் பொங்கிரி ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து இந்த சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டுள்ளது.

சர்வதேச தரம் வாய்ந்த செயற்கைகோள்களை விண்ணில் செலுத்த இந்த எஞ்சின் உதவிக்கரமாக இருக்கும் என வடகொரியா தெரிவித்துள்ளது. ஐ.நாவால் தடை செய்யப்பட்ட அணுகுண்டு சோதனையையும், ஹைட்ரஜன் சோதனையையும் நடத்தியுள்ள வடகொரியாவின் நடவடிக்கைகள் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# முஸ்லிம் பெயர் கொண்டிருந்ததால் பொலிஸ் அதிகாரியிடம் கெடுபிடி

## அமெரிக்க சுங்க அதிகாரிகள் அதிரடி



அமெரிக்காவில் முஸ்லிம் பெயர் கொண்ட முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யபட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஹசான் ஏடன் (52) அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணத்திலுள்ள அலெக்ஸ்சாண்ட்ரியா நகரில் 26 ஆண்டுகள் துணை பொலிஸ் அதிகாரியாக பணியாற்றியவர். கடந்த 2015ஆம் ஆண்டு தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

ஹசான் ஏடன் மார்ச் மாதம் 13ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள ஜோன் எப் கென்னடி விமான நிலையத்தில் தனது பெயரின் காரணமாக சுமார் 90 நிமிடங்கள் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து ஹசான் ஏடன் ஞாயிற்றுக்கிழமை வொஷிங்டன் போஸ்ட் செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளதாவது:-

மார்ச் மாதம் 13ஆம் திகதி எனது அம்மாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை முடித்துவிட்டு பாரீஸிலிருந்து விமானம் மூலம் அமெரிக்கா வந்தடைந்தேன். சுங்கத்துறை அதிகாரிகள் எனது பாஸ்போர்ட்டை திரும்ப அளித்து, 'தாய் நாட்டுக்கு வரவேற்கிறோம்' என்று அனைவரையும் வரவேற்பது போல வரவேற்பார்கள் என்று நினைத்தேன். ஆனால், சுங்க அதிகாரிகள் என்னிடம் தனியாகவா வந்தீர்கள்? என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் நான் முன்னாள் பொலிஸ் அதிகாரி என்று கூறினேன். அவர்கள் என்னை பொருட்படுத்தவில்லை, என்னை அலுவலகத்துக்குள் அழைத்துச் சென்றார்கள்.

அதிகாரிகள் எனது போனை பயன்படுத்த அனுமதிக்கவில்லை. என்னை தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டதற்கான முழு காரணத்தையும் சுங்க அதிகாரிகள் என்னிடம் கூறவில்லை. தொடர்ந்து 42 வருடங்களாக அமெரிக்காவில் வாழும் இத்தாலியில் பிறந்த அமெரிக்க குடிமகன் நான்.

முன்னாள் பொலிஸ் அதிகாரி என்று கூறியதற்கு அங்கிருந்த அதிகாரி ஒருவர், ''உங்கள் பதவி ஒரு விஷயமல்ல'' என்றார். மற்றொரு அதிகாரி ''ஏடன் என்ற பெயர் கண்காணிப்புப் பட்டியலிலுள்ளது'' என்றார் மேலும் என்னைப் பற்றி அதிகாரிகள் அளித்த செய்திகளை ஒரு நிறுவனம் குறுக்கு விசாரணை நடத்தியது என்று கூறினார்.

இதுகுறித்து அமெரிக்க சுங்க நிறுவனம் மற்றும் எல்லை பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் கூறும்போது,

''ஏடன் குறித்து தனிப்பட்ட கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால், அமெரிக்கா வரும் அனைத்து பயணிகளும் ஆய்வுக்குட்படுத்தப்படுகிறார்கள்'' என்றார்.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி 20ஆம் திகதி டிரம்ப் பதவியேற்றார். சில நாட்களிலேயே ஈரான், சிரியா, யெமன், லிபியா, சோமாலியா மற்றும் சூடான் ஆகிய 6 நாடுகளின் பயணிகள், அகதிகள் அமெரிக்காவில் நுழைய தடை விதித்து அவர் உத்தரவிட்டார்.

முஸ்லிம் பெயர்களை உடையவர்கள் தொடர்ந்து அமெரிக்க விமான நிலையங்களில் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பின்னரே அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தசைப்பிடிப்பை போக்க மலைப்பாம்பு மசாஜ்



ஜெர்மனியிலுள்ள சிகை அலங்கார நிலையமொன்று வாடிக்கையாளர்களின் கழுத்தில் ஏற்படும் தசை பிடிப்பை மலைப்பாம்பு மசாஜ் மூலம் சீரமைக்கின்றனர். இந்த சிகையலங்கார நிறுவனம் ஜெர்மனியில் டிரெஸ்டென் நகரில் உள்ளது.

இதன் உரிமையாளர் பிராங்க் டோசியன். இவர் ஒரு மலைப்பாம்பை வளர்த்து வருகிறார். அதற்கு மாண்டி என பெயரிடப்பட்டுள்ளது.

வாடிக்கையாளருக்கு முடித்திருத்தம் செய்த பிறகு இறுதியில் அவரது கழுத்தில் மாண்டி மலைப்பாம்பு சுற்றப்படுகிறது. அது தனது தசையின் மூலம் லேசாக நெளிந்தபடி கழுத்து பகுதியில் மசாஜ் செய்கிறது.

இத்தகைய மசாஜ் பணியில் மலைப்பாம்பு சுமார் 13 வருடங்களாக ஈடுபட்டு வருகிறது.

மலைப்பாம்பு மசாஜை ஏராளமான வாடிக்கையாளர்கள் விரும்பி செய்கின்றனர். பொதுவாக தனது இரையை வேட்டையாடும் மலைப்பாம்புகள் அதை பிடித்து உடலை நெரித்து கொன்று சாப்பிடும். ஆனால், மனிதர்களை கொல்வது மிகவும் அரிது என பாம்பு ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே மலைப்பாம்பு மசாஜ் சிகிச்சைக்கு என தனியாக கட்டணம் வசூலிப்பதில்லை. மசாஜ் செய்து கொள்பவர்கள் ஒரு சிறு தொகையை மாண்டி மலைப்பாம்புக்கு நன்கொடையாக வழங்குகின்றனர்.

# தாயின் கல்லறையிலேயே என்னை புதைத்து விடுங்கள்

## புற்றுநோய் பாதித்த சிறுவனின் உருக்கமான வேண்டுகோள்



போலந்து நாட்டைச் சேர்ந்த சிறுவன் தனது தாயாரை அடக்கம் செய்த கல்லறையிலேயே, தம்மையும் அடக்கம் செய்யுமாறு உருக்காமான வேண்டுகோள் விடுத்துள்ளான்.

பியோட் குவாஸ்நீ-அக்னீஸ்கா தம்பதிகளுக்கு மகனாக பிறந்த பிலிப்பிற்கு சற்று விவரம் தெரிய தொடங்கியிருந்த நிலையில், அவனது தாயார் அக்னீஸ்கா, புற்றுநோய் பாதிப்பிற்கு ஆளாகி உயிரிழந்தார். தாயின் பிரிவு சிறுவனை அணுகா வண்ணம், அவனது தந்தை பியோடர் வளர்த்து வந்தார்.

பிலிப் வயது 7 ஆக இருக்கும் போது திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள், பிலிப்பிற்கு இரத்த புற்றுநோய் இருப்பதாக தெரிவித்தனர். பின்னர் பிலிப்பின் உடல் மெலிய தொடங்கிய நிலையில், லண்டனுக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார் அவனது தந்தை பியோட். லண்டனில் குழந்தைகள் புற்றுநோய் சிகிச்சை மையத்தில் அனுமதிக்கப்பட்டான்.

இங்கு அவனுக்கு கீமோதெரபி உள்ளிட்ட சிகிச்சையளித்தும் இரத்த புற்றுநோய் குணமாகவில்லை. இந்நிலையில், தனது மரணத்தை உணர்ந்திருக்கும் சிறுவன், தான் இறந்தால், தனது தாயாரை அடக்கம் செய்த கல்லறையிலேயே தன்னையும் அடக்கம் செய்யுமாறு தெரிவித்துள்ளான்.

மருத்துவர்கள் கைவிரித்துவிட நிலையில் வலி நிவாரணி மாத்திரைகளோடு, இறுதி பயணத்தில் இருக்கிறான் சிறுவன் பிலிப். சிறுவனின் இறுதி ஆசையை நிறைவேற்ற அவனது தந்தை பியோட் முடிவு செய்தபோது, அதற்கு 6 ஆயிரத்து 500 பவுண்ட் நிதியுதவி தேவைப்பட்டது. இது குறித்த தகவல் சமூக வலைதளங்களில், பரவியது. சிறுவனின் இறுதி ஆசையை படித்து உருகிய கொடையாளார்கள், இதுவரை 37 ஆயிரம் பவுண்டு நிதியை வழங்கியுள்ளனர்.

# கிழக்கில் 104 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்



கிழக்கு மாகாண மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டினால் கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானப் பாட ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்விமைச்சர் எஸ் தண்டாயுதபானி,விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் மற்றும் மாகாண சபை உறுப்பினர் எம் அன்வர் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்,

இதன்போது 104 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதில்போட்டிப் பரீட்சையில் தோற்றி 40 புள்ளிகளைப் பெறாத பட்டதாரிகளை உள்ளீர்க்கவெட்டுப்புள்ளிகளை 35 ஆக குறைத்து பட்டதாரிகளை உள்வாங்க கிழக்கு மாகாண சபை தீர்மானித்த்து, இதனடிப்படையில் 07 கணித ஆசிரியர்கள்,74 ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் 23 விஞ்ஞான ஆசிரியர்களுக்கான நியமனங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

## நாச்சியா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வந்த சில பௌத்த குருமார்கள் முஸ்லிம்கள் வசிக்கின்ற வாழும் தோட்ட தக்கியாப்பகுதியில் வந்து தகாத வார்த்தைகள் பேசி முஸ்லிம்களுக்கு இந்தப்பிரதேசத்தில் எந்த உரிமையும் கிடையாது. இது பௌத்த நாடு பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானதாகும். என்று இனவாதத்தை தூண்டுகின்ற கருத்துக்களை அங்கே பேசியுள்ளார்கள். இந்த எதிர்பாராத நிகழ்வினால் கலவரம் அடைந்த முஸ்லிம்கள் அவசரமாக அண்மையிலுள்ள ஹிதோகம பொலிஸாருக்கு விடயத்தை தெரியப்படுத்தியுள்ளனர்.

விடயத்தின் தீவிரத்தை உணர்ந்த ஹிதோகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராச்சி உடனே ஸ்தலத்திற்கு விரைந்து சம்பந்தப்பட்ட பௌத்த குருமார்களை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவந்தார், அத்தோடு அந்தப்பிரதேசத்திற்கு பொறுப்பான பிரதான பௌத்த குருவான அதுருவெல்லை சாத்தாதிஸ்ஸ ஹிமிக்கும் , நாச்சியாதீவு பிரதான பள்ளிவாசல் தலைவருக்கும் அறிவித்தார்.

விடயங்களை அறிந்த அதுருவெல்லை சாத்தாதிஸ்ஸ ஹிமி பிரச்சினை ஏற்படுத்த முயன்ற அந்த இளம் பௌத்த குருமார்களுக்கு புத்திமதி கூறியதோடு, சகல இனங்களும் ஒற்றுமையாக வாழுகின்ற இந்தப்பிரதேசத்தில் புதிதாக இனவாதத்தை விதைக்க வேண்டாம், முஸ்லிம்கள் எமது சகோதரர்கள் அவர்களை பாதுகாக்கின்ற கேடயமாக நாங்கள் இருப்போம். உங்களது இனவாத செயற்பாடுகளை இந்தப்பிரதேசத்தில் நான் அனுமதிக்க மாட்டேன், எங்கிருந்தோ வந்த நீங்கள் ஒற்றுமையாக வாழுகின்ற இரண்டு சமூகத்திற்குள் பிரச்சினையையும்,பிளவுகளையும் ஏற்படுத்த முயற்சி செய்கிறீர்கள்.எங்கள் பிரதேசத்தை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். நீங்கள் இங்கு வந்து புதிதாக எதனையும் எமக்கு படிப்பித்துத்தர தேவையில்லை என்று கடும் தொனியில் கூறினார். பிரச்சினை ஏற்படுத்திய இனவாத இளம் பிக்குகள் வாயடைத்து போனதோடு பள்ளிவாசல் தலைவரிடம் மன்னிப்பு கோனார்கள்.

இனிமேல் இவ்வாறான இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை என்று அவர்கள் உறுதிமொழி வழங்கியதை அடுத்து பிக்குகள் விடுவிக்கப்பட்டனர். பாரிய இனவாத பிரச்சினையாக வெடிக்க இருந்த இந்த சம்பவம் ஹிதோகம பொலிஸ் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராச்சி மற்றும் பிரதான பிக்கு அதுருவெல்லை சாத்தாதிஸ்ஸ ஹிமி ஆகியோரின் நேர்மையான செயற்பாட்டினால் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

நாச்சியாதீவு கிராமமானது முஸ்லிம்கள் தனியாக வாழுகின்ற மிகப்பெரிய கிராமமாகும். இங்கு வாழுகின்ற முஸ்லிம்கள் பூர்வீகமாக இந்தப்பிரதேசத்தில் காலாதி காலமாக வாழ்ந்து வருகின்றனர். கிராமத்தின் கிழக்குப்பகுதியில் சுமார் 200 வருடங்கள் பழைமைவாய்ந்த சியாரம் ஒன்று அமைந்துள்ளது. கடந்த காலங்களில் இந்த சியாரத்தை ஒட்டிய பிரதேசத்தில் வாழும் தோட்ட தக்கியாக கந்தூரி எனும் பெயரில் கந்தூரி நடைபெற்று வந்தது.

கடந்த 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்தக் கந்தூரி நிறுத்தப்பட்டு குறிப்பிட்ட தோட்டமானது நாச்சியாதீவு பிராதன பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. சியாரம் அமைந்துள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடம் சிதைவடைந்து காணப்படுவதனால் புதிதாக ஒருகட்டடத்தை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போது நீர்ப்பாசனத்துறையின் பிராந்திய பொறியியலாளரினால் அது நிறுத்தப்பட்டது.

## உள்ளூராட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இணக்கப்பாட்டுடனேயே நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் அமைச்சர் சம்பிக ரணவக கூறினார்.

பாணந்துறை அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற திபெத் நாட்டவரான எஸ். மகிந்த தேரரின் 6ஆவது நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அரசியலமைப்பு என்பது நாட்டில் பிரதான சட்டம். இந்த அரசியலமைப்பினை இம்முறை நிறைவேற்றுவதாக இருந்தால் இது சகல அரசியல் கட்சிகளதும் இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்பட வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐ.தே. க. வினதும் கருத்துக்கள் மட்டும் பெறுவது போதாது. எல்லாத் தரப்பினரதும் கருத்துக்களைப் பெற்று கூட்டு முயற்சியாக இது அமைய வேண்டும். இது பெரும் அங்கிகாரமாக அமைய வேண்டும். அவ்வாறில்லாத அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்கு எதிரான அரசியலமைப்புச் சட்டம் எனப் பிரகடனப்படுத்த வேண்டும்.

இந்த நாட்டின் ஒற்றையாட்சி பற்றி பொய்க்குரைக்கும் சகலருக்கும் நாம் கூறுவது இந்த நாட்டின் ஒற்றையாட்சி எமக்குத் தேவைப்படுவது நாட்டின் சுதந்திரத்திற்காகும். அந்த ஸ்திரத்தன்மையை எந்த வகையிலும் உடைத்துப் போடுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இன்று சுதந்திர ஆணைக்குழுக்களுக்கு என்ன நடந்திருக்கின்றது என்று யாராவது கேட்கிறார்களா? தேர்தல் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. தேர்தல் சட்டம் மாற்றப்படவில்லை. கணக்காய்வு ஆணைக்குழுவை அமைத்தோம். கணக்காய்வு சட்டம் திருத்தப்படவில்லை. கொள்வனவு ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இதற்குரிய சட்டங்கள் மாற்றப்பட வில்லை. இன்றும் 2006 வர்த்தமானியிலே இருக்கிறது. எந்த அரச நிறுவனத்திலும் கொள்வனவைச் செய்ய முடியாது. அதேபோன்று உள்ளூராட்சித் தேர்தல் முறையை மாற்றினார்களே. ஆனால் இப்போது பல வருடங்களாகின்றன. உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாதிருக்கின்றது. இனி இந்த கையறு இழப்பு போதும். இழுத்து இழுத்து இருக்காது எந்த முறையிலாவது தேர்தல் நடத்தப்பட வேண்டும். இந்த நாட்டு மக்களது ஜனநாயக உரிமையை பறித்தெடுப்பது பெருந் தவறு. ஏனெனில் இந்த நாட்டில் பல கிளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இரத்தம் சிந்திய நாடு. இந்த நாட்டுக்கு உடன் ஜனநாயகம் வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஹெல தருண சவிய என்ற அமைப்பு இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

## ஐ.நா. மனித...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பிலான தீர்மானத்தின் மீது நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ள விவாதத்தின்போது, இலங்கை அரச தரப்புக் குழுவுக்கு வெளிவிவகார பிரதியமைச்சரான ஹர்ஷ டி சில்வா தலைமைத் தாங்குவார் என்று தெரியவந்துள்ளது.

நாளை மறுதினம் வியாழக் கிழமை இலங்கை தொடர்பான தீர்மானம நிறைவேற்றப்படவுள்ள நிலையில், இத்தீர்மானம் நிறைவேற்றப்படும்போது இலங்கைக் குழுவுக்கு வெளிவிவகார பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வாவை தலைமை ஏற்குமாறு, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கேட்டுக் கொண்டுள்ளமைக்கு இணங்கவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியக்கிடைத்துள்ளது.

இத்தீர்மானமானது நாளைய தினத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான ரவிநாத் ஆரியசிங்கம் தலைமைத் தாங்குவார் என்று ஏற்கனவே கூறப்பட்டிருந்தநிலையில் தான் அரசு மேற்கண்டவாறு முடிவெடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை பற்றி தீர்மானிக்கும் அதிகாரம் வில்லியம் றோட்டுக்கு

(அ.அருண் பிரசாந்த்)

இலங்கை விவகாரம் தொடர்பாக முடிவுகளை எடுக்கும் அதிகாரங்கள் அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான முதன்மைப் பிரதி உதவிச்செயலரான வில்லியம் ஈ றொட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் றெக்ஸ் ரில்லர்சனின் பணிப்புக்கமைவாகவே ஐ.நாவில் இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்கான முழு அதிகாரமும் வில்லியம் ஈ றொட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவரான பிரசாத் காரியவசத்துடனும் வில்லியம் ஈ றொட் சந்தித்து கலந்துரையாடியுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதுதொடர்பாக அவர் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியுள்ள இரகசிய செய்திக்குறிப்பில், இலங்கை குறித்த கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் முடிவுகளை மேற்கொள்ள ட்ரம்ப் அரசுக்கு காலம் தேவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமைப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு மேலும் 2 வருடகால அவகாசத்தை வழங்கும் ஒரு பிரேரணையை அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட 4 நாடுகள் கடந்த 13 ஆம் திகதி ஜெனீவாவில் கொண்டுவந்தன.

இதன்மீதான விவாதம் நாளை ஆரம்பமாகி நாளைமறுதினம் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளநிலையிலேயே மேற்படித் தகவலானது அறியக்கிடைத்துள்ளது.



முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச்.எம்.அஸ்வர் கல்முனைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது...

படத்தில் மௌலவி அப்துல் மஜீத் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். சகாவுல்லாஹ் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம் - ரமீஸ்)

# உதயம் டிவி. வியாழன் முதல் உதயமாகிறது

இலங்கையின் முதலாவது தமிழ் HD தொலைக்காட்சி உதயம் டிவி எதிர்வரும் வியாழக்கிழமை உதயமாகின்றது.

வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் டயலொக் டிவி 135 அலைவரிசை மற்றும் கேபிள் டிவிகளிலும் ரசிகர்கள் பார்வையிடலாம்.

இலங்கையில் முதல் HD தமிழ் தொலைக்காட்சியானது சமூக அரசியல் விடயங்கள், மிகத்தரமான பொழுது போக்கு நிகழ்ச்சிகளுடன் 24 மணிநேர தொலைக்காட்சியாக இயங்ககவுள்ளது.

## முஸ்லிம் தனியார்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சட்ட திருத்த குழுவுக்கு அறிவுறுத்த அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தீர்மானித்துள்ளதாக ஜம்இய்யாவின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி அஷ்ஷெய்க் பர்ஹான் பாரிஸ் தெரிவித்தார்.

முஸ்லிம் தனியார் சட்ட திருத்தம் தொடர்பாக சலீம் மர்ஸூப் குழுவின் கலந்துரையாடல் மற்றும் இறுதி அறிக்கைகள் குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சலீம் மர்ஸூப் குழுவுக்கு 91 பக்கங்கள் கொண்ட வழிகாட்டலொன்றை கடந்த ஜனவரி மாதம் வழங்கியிருந்ததாகவும், அதுகுறித்த மேலதிக தெளிவுகளும் வழிகாட்டல்களுமே எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி சலீம் மர்ஸூப் குழுவுடன் ஜம்இய்யா தலைமையகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், ஜம்இய்யதுல் உலமாவுடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்தே இறுதி அறிக்கைகள் தயாராகும் என்று முஸ்லிம் தனியார் சட்ட திருத்த குழுவின் தலைவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்ஸூப் தெரிவித்தார்.

முஸ்லிம் தனியார் சட்டம், முஸ்லிம் விவாக வயதெல்லை, காதி நீதிமன்றங்கள், காதி நீதவான்கள் தரத்தை அதிகரித்தல், பலதார மணம், முறையான திருமண பதிவுகள், விவாகரத்து பராமரிப்பு, சட்டத்தில் பெண்களுக்கான இடம், விவாகரத்து போன்ற விடயங்கள் குறித்தே மேற்படி கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

## கண்டியில் விபத்து

(மொஹொமட் ஆஸிக்)

கண்டி நகரில் 19 மாலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் 19 வயதுடைய மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கண்டி பொலீஸார் தெரிவித்தனர். நேற்று 19 மாலை பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் போது கண்டி புகையிரத நிலையத்திற்கு முன் பொது கடவையில் வைத்து டிப்பர் வண்டி ஒன்றில் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்தில் கடும் காயங்களுக்கு உள்ளாகிய திகன ரஜவெல்ல பிரதேசத்தை சேர்ந்த நிமேஷா பிரபோதனி கம்லத் என்ற 19 வயதுடைய மாணவி அங்கு உயிரிழந்துள்ளார்.

## பாதுகாப்பினை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு அமைச்சர் நேற்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவையும் பாதுகாப்புச் செயலாளரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் இன்று சபுகஸ்கந்த பாதுகாப்பு கல்லூரிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

## தம்மாலோக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கிருலப்பனை, ஹெலன் மெதினியாராம விகாரைக்குள் பொதுமக்களுக்கு பிரச்சினை ஏற்படும் வகையில் ஒலிபெருக்கியை பயன்படுத்தியமைக்கு எதிராக, முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட உள்ளிட்ட குழுவினர் தாக்கல் செய்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனையடுத்து, கடந்த வழக்கு விசாரணையின் போது வாக்குறுதியளித்தபடி, தம்மாலோக தேரர், நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

அவர் அனுமதியின்றி தற்போது வெளிநாடு சென்றுள்ளதாகவும் தெரியவந்ததனையடுத்து, அவரைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பித்து நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

## வெப்ப கால நிலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆகிய மாவட்டங்களிலும் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இடைப்பருவப் பெயர்ச்சி காலநிலை நிலவுவதால் பகல் வேளைகளில் அதிக வெப்பம் காணப்படும் என்றும், இந்த வெப்ப காலநிலையானது எதிர்வரும் மே மாதம் வரை நீடிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று ஆகக்கூடுதலான மழை வீழ்ச்சி உளிந்துவாவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளதோடு, அங்கு 128 தசம் 6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. ஆகக்கூடுதலான வெப்பநிலையாக 33 தசம் 6 பாகை செல்சியஸ் அனுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. ஆகக்குறைந்த வெப்பநிலை நுவரெலியாவில் பதிவாகியுள்ளது. அங்கு 10 தசம் 7 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

## முஸ்லிம் திணைக்கள...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழுவிலிருந்து இதுவரை விடுவிக்கப்படாததினால் இவருக்குப் புதிய பதவியை ஏற்க முடியாதுள்ளது.

பொதுச் சேவை ஆணைக்குழு சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவி வகிக்கும் மலிக்கின் இடத்திற்கு ஒருவரை நியமித்த பின்பே அவரை விடுவிப்பதாக பொதுச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## நாடளாவிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வணிக அமைச்சரான ரிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.

அதேநேரம், இன்னும் சில மாதங்களில் நாட்டிலுள்ள அனைத்து சதோச நிலையங்களும் கணினி மயமாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற மாகாண கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சதோச விற்பனை நிலையங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் ஒப்படைத்தபோது அவை பாரிய நஷ்டத்திலேயே இயங்கிக் கொண்டிருந்தன. இதனை சவாலானப் பணியாக எடுத்துக் கொண்ட நான், இதற்கான காரணத்தை ஆராந்தபோது கணினி மயமாக்கப்படாமை, களஞ்சியப்படுத்தும் வசதியின்னை, நிலையான களஞ்சியசாலை இன்மை, கூடியளவில் மற்றும் குறைந்தளவில் விற்பனையாகும் பொருட்கள் தொடர்பில் அதிகாரிகளுக்கு தெரியாமை, போக்குவரத்து வசதியின்மை, நீண்ட நாட்களாக கணக்கிடல் இடம்பெறாமை, சிசிடிவி கமெரா இன்மை என பலப் பிரச்சினைகள் இந்நிறுவனங்களில் இருந்தமை கண்டுப்பிடிக்கப்பட்டு அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன. இதனால், தற்போது இந்நிறுவனம் இலாபகரமான நிறுவனமாக இயங்கி வருகின்றது.

செல்வந்த வர்க்கத்தினருக்கு மட்டுமன்றி உழைகை;கும் வர்க்கத்தினருக்கும் தரமான பொருட்களை வழங்க வேண்டும் என்ற நோக்கிலேயே நாம் செயற்பட்டுவருகின்றோம். இதற்காக அரசி உள்ளிட்ட 25 அத்தியாவசியப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையையும் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

மேலும், எதிர்வரும் 28 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் 50 சதோச நிறுவனங்களையும் புதிதாக நாம் திறக்கவுள்ளோம். இந்நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு ஒரே நேரத்தில் 50 நிறுவனங்களை திறக்கவுள்ளோம்.

இவ்வாறு தற்போது 300 ஆக காணப்படும் சதோச நிறுவனங்களின் எண்ணிக்கையை டிசம்பர் மாதத்துக்குள் 500 ஆக அதிகரித்துவிட்டு, சதோச நிறுவனங்களை இனிமேல் புதிதாக திறக்காது, கோப் சிற்றி போன்ற வர்த்தக நிலையங்களை அபிவிருத்தி செய்வதிலேயே நாம் மும்முரம் காட்டவுள்ளோம் என்றார்.

## ஜனாதிபதி ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விக்ரமசிங்கவிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருந்தார். இதன் மூலம் திஸ்ஸ அத்தநாயக்க இனவாதத்தை தூண்டியதாக குற்றம்சாட்டி சட்ட மா அதிபர் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கருத்து தெரிவித்த அரசு சட்டத்தரணி, இந்த வழக்கை முன்கொண்டு செல்ல பிரதமர், ஜனாதிபதி ஆகியோரின் சாட்சியங்களை பதிவு செய்வது அவசியமென்று குறிப்பிட்டார்.

அத்துடன் பணிகள் காரணத்தினால் நேற்றைய தினத்தில் தம்மால் நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியாதென்றும் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேறொரு தினத்தை பெற்றுத் தருமாறும் பிரதமர, ஜனாதிபதி வேண்டுகோளை விடுத்துள்ளதனர் என்று அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் அறிவித்தார்.

இதனையடுத்து எதிர்வரும் ஜூலை மாதம் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுஆராச்சி நேற்று உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



### வரலாற்று டெஸ்ட் வெற்றியில் பங்களாதேஷ்:

## சபிருடன் லக்மால் வாக்குவாதம் சமரசம் பேசிய நடுவர்கள்



இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று, தனது வரலாற்று டெஸ்ட் வெற்றியை பதிவு செய்துள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையேயான 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பு சரா. மைதானத்தில் நடைபெற்றது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 338 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்து ஆடிய பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 467 ஓட்டங்கள் குவித்தது.129 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை துவங்கிய இலங்கை அணி 319 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் வங்கதேச அணிக்கு வெற்றி இலக்காக 191 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சர்க்கர் 10 ஓட்டங்கள், இம்ருல் கேய்ஸ் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வந்தவேகத்தில் பௌலியன் திரும்பினர். அடுத்தடுத்து விக்கெட்டுகள் விழுந்ததால், இலங்கை அணி வீரர்கள் உற்சாகமுடன் செயற்பட்டனர்.

ஆனால், மற்றொரு தொடக்க வீரரான தமிம் இக்பால் நிலைத்து நின்று பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்த, வங்கதேச அணியின் ஓட்ட விகிதம் சீரான இடைவெளியில் உயர்ந்தது. இதனால் வங்கதேச அணி 6 விக்கெட் இழப்பிற்கு 191 ஓட்டங்கள் குவித்து எளிதாக வெற்றி பெற்றது.

வங்கதேச அணி சார்பில் தமிம் இக்பால் அரைச்சதம் கடந்து 82 ஓட்டங்களும், சபீர் ரஹ்மான் 41 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்துள்ளது.

மேலும் இப்போட்டியின் போது இரண்டாம் இன்னிங்ஸில் 91.3 ஓவரை, லக்மால் எதிர்கொண்ட போது, சிலிப்பில் நின்று கொண்டிருந்த சபீர் ரஹ்மானுக்கும், அவருக்கும் இடையே வாக்குவாதம் நடைபெற்றது. இதைக் கண்ட நடுவர்கள் சமரசம் பேசி ஆட்டத்தை தொடங்கினர்.

## அஸ்வின் மரணம் விபத்தல்ல திட்டமிட்ட கொலை?



கார் பந்தய வீரர் அஸ்வின் மற்றும் அவரது மனைவி ஆகியோர் கார் விபத்தில் கருகி உயிரிழந்தது திட்டமிட்ட கொலை என்றக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலையில் சென்னை பட்டினம்பாக்கம் அருகில் பிரபல கார் பந்தய வீரர் அஸ்வின் சுந்தர் மற்றும் அவரது மனைவி நிவேதா காரில் செல்லும் போது திடீரென்று விபத்து ஏற்பட்டு இருவரும் எரிந்து சாம்பலாகினர்.

கார் பந்தய வீரரான அஸ்வின், ஓராண்டிற்கு முன்னர்தான் நிவேதா என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர்கள் இருவரும் சொகுசு காரில் எம்.ஆர்.சி. நகரில் அருகில் சென்று கொண்டிருந்த போது கார் திடீரென்று தீப்பிடித்து பற்றி எரிந்தது.

இதில் காரில் இருந்து தப்ப முடியாத அஸ்வின் மற்றும் நிவேதா சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்கள். 3 மணி நேரமாக காருக்குள் உயிரோடு எரிந்து கருகிய நிலையிலேயே அவர்களது உடல் மீட்கப்பட்டது. இந்த திடீர் சம்பவத்தால் அதிர்ச்சி அடைந்துள்ள அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இந்த விபத்து திட்டமிட்ட கொலையாக இருக்க வாய்ப்பிருப்பதாக கூறுகின்றனர்.

கார் மோதிய விதம், தீப்பிடித்து எரிந்த நிலை உள்ளிட்டவற்றை சிலர் சந்தேகத்தோடே பார்க்கின்றனர். அஸ்வின் ஒரு கார் பந்தய வீரர் என்பதால் சாதாரணமாக வீதியில் செல்லும் போது கட்டுப்பாட்டை இழக்காமல்தான் செல்வார்.?

அதுவும் மனைவியுடன் செல்லும்போது இன்னும் எச்சரிக்கை உணர்வுடன் செல்லும் அஸ்வினுக்கு விபத்து நடந்திருக்க வாய்ப்பில்லை என்கிறார்கள் நண்பர்கள்.

சொகுசு காரில் அனைத்து விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் வசதிகளும் செய்யப்பட்டிருக்கும் நிலையில், அஸ்வின் கார் தீப்பிடித்தது எப்படி? அப்படியே தீப்பிடித்தாலும் அதில் தப்பி வருவதற்கான வழிகள் என்ன ஆனது? இப்படி ஏகப்பட்ட கேள்விகளை உறவினர்கள் அடுக்கிக் கொண்டே செல்கின்றனர்.

இந்த கேள்விகள் எல்லாம் ஒரு புறம் இருக்க, அவர் சென்ற விருந்துபசாரத்தில் என்ன நடந்தது என்பதுதான் முக்கியமான கேள்வி.

அஸ்வின் யார் கொடுத்த விருந்தில் தனது மனைவியுடன் கலந்து கொண்டார் என்றும் அங்கு யார் யாருடன் என்னென்ன பேசினார் என்பது பற்றி எல்லாம் தீர விசாரித்தால் பல உண்மைகள் வெளியே வரும் என்று அஸ்வினின் நண்பர்கள் உறவினர்கள், தெரிவிக்கின்றனர்.

### 69 ஆண்டுகால சாதனையை முறியடித்த

## புஜாரா - சஹா ஜோடி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் புஜாரா, சஹாவின் சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி முன்னிலை பெற்றுள்ளது.

ராஞ்சியில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 451 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது.

பின்னர் களமிறங்கிய இந்திய அணிக்கு லோகேஷ் ராகுல், முரளி விஜய் சிறப்பான தொடக்கத்தை கொடுத்தனர். பின்னர் களமிறங்கிய புஜாரா அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களை கடுமையாக சோதித்தார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய புஜாரா டெஸ்ட் போட்டிகளில் 3ஆவது இரட்டை சதத்தினைப் பதிவு செய்தார். போட்டியின் இரண்டாம் நாளில் களமிறங்கிய புஜாரா, 525 பந்துகளை எதிர்கொண்டு 202 ஓட்டங்கள் குவித்து 4ஆம் நாளில் ஆட்டமிழந்தார்.

31வது ஓவரில் களமிறங்கிய புஜாரா 192 ஆவது ஓவரில் ஆட்டமிழந்து வெளியேறினார். புஜாராவுக்கு பக்கபலமாக விளையாடிய சஹா சதமடித்தார். அவர் 117 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த இணை 7ஆவது விக்கெட்டுக்கு,199 ஓட்டங்கள் சேர்த்தது. இதன்மூலம் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி சார்பில் 7ஆவது விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த இணை என்ற பெருமையை புஜாரா - சாஹா இணை பெற்றது.

1948-ஆம் ஆண்டு நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட்டில் விஜய் ஹசாரே, ஹேமந்த் அதிகாரி இணை குவித்த 132 ஓட்டங்கள் என்ற 69 ஆண்டுகால சாதனையை இவர்கள் முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## களத்தடுப்பின் பலவீனமே தோல்விக்கு காரணம்

### அணித்தலைவர் ரங்கன ஹேரத்

பங்களாதேஷ் அணியுடனான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்தமைக்கான காரணம் களத்தடுப்பில் ஏற்பட்ட பலவீனங்கள் என அணித் தலைவர் ரங்கன ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இறுதிப் போட்டி நிறைவடைந்த பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை தெரிவித்தார். இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியை பங்களாதேஷ் அணி வெற்றிகொண்டது. அந்த அணியின் 100ஆவது டெஸ்ட் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.



கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த 14ஆம் திகதி கண்டி போகம்பரை மைதானத்தில் இடம்பெற்றன. இப் போட்டிகளில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மாகாண சபை உறுப்பினர்களான எம்.டீ.எம். முத்தலிப், ஜே.ஜெய்னுல் ஆப்தீன், ஹிதாயத் சத்தார் ஆகியோர் உட்படப் பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகளில் இல்லங்கள் பெற்ற புள்ளிகள் அடிப்படையில் முதலாம் இடத்தை 332 புள்ளிகளைப் பெற்ற ஆமினா இல்லம்பெற்றுக் கொண்டதுடன் இரண்டாம் இடத்தை 330 புள்ளினை பெற்ற கதீஜா இல்லம்பெற்றுக் கொண்டது. மூன்றாம் இடத்தை 305 புள்ளிகளைபெற்ற பாதிமா இல்லமும் நான்காம் இடத்தை 270 புள்ளிகளைபெற்ற ஆயிஷா இல்லமும் பெற்றுக்கொண்டன. வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கேடயங்களை மாகாண சபை உறுப்பினர்களான எம்.டீ.எம். முத்தலிப், எம்.ஜெய்னுல் ஆப்தீன், ஹிதாயத் சத்தார் கல்லூரி அதிபர் திருமதி சியானா ரஹீம் ஆகியோர் வழங்கி வைத்தனர்.(வத்துகாமம் நிருபர்)

## தோள்பட்டை காயம் குறித்து கேலி; பதிலடி கொடுத்த விராட் கோஹ்லி




தனது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் குறித்து கேலி செய்த அவுஸ்திரேலிய வீரர் மேக்ஸ்வெலுக்கு தகுந்த பதிலடி கொடுத்துள்ளார் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி.

இந்திய, அவுஸ்திரேலிய வீரர்களின் சீண்டல் ராஞ்சி டெஸ்டிலும் தொடருகிறது. 3ஆவது நாள் ஆட்டத்தின் போது பந்தை பவுண்டரி அருகே பாய்ந்து விழுந்து தடுத்த ஆஸ்திரேலிய வீரர் மேக்ஸ்வெல், காயமடைந்த இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லியை போன்று தன் தோள்பட்டையை பிடித்துக்கொண்டு வலிப்பது போல் நடித்து கேலி செய்தார்.

இதற்கு இந்திய கேப்டன் விராட் கோலி நேற்றுமுன்தினம் சுடச்சுட பதிலடி கொடுத்துள்ளார்.

அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்னர் ஆட்டம் இழந்தபோது அவரை வெறுப்பேற்றும் விதமாக தனது தோள்பட்டையை தட்டிக் காட்டியபடி மகிழ்ச்சியை கொண்டாடினார்.

## இண்டியன்வெல்ஸ் மாஸ்டர்ஸ்; வெற்றிவாகை சூடிய பெடரர்



இண்டியன்வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் ஸ்டோன் வாவ்ரிங்காவை ரோஜர் பெடரர் வீழ்த்தி பட்டம் வென்றார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிச்சுற்றில் உலகின் 3ஆம் நிலை வீரரான ஸ்டான் வாவ்ரிங்காவை உலகின் 10ஆம் நிலை வீரரான பெடரர், 6-4, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வென்றார்.

இது பெடரரின் 90ஆவது பட்டமாகும். இண்டியன்வெல்ஸ் மாஸ்டர்ஸ் போட்டியை 5ஆவது முறையாக வென்றுள்ளார்.

பெடரரும், வாவ்ரிங்காவும் இது வரை 23 முறை நேருக்கு நேர் சந்தித்துள்ளனர். இதில் பெடரர் 20 வெற்றிகளையும், வாவ்ரிங்கா 3 வெற்றிகளையும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ராஞ்சி டெஸ்டில் நடுவரின் காமெடி



ராஞ்சி டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 603 ஓட்டங்களை குவித்து டிக்ளேர் செய்தது. இந்த போட்டியில் நடுவர் கிறிஸ் கேபனி (நியூசிலாந்து) செய்த காமெடி அனைவரையும் சிரிக்க வைத்தது.

ராஞ்சி டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 603 ஓட்டங்களை குவித்து டிக்ளேர் செய்தது.

புஜாரா இரட்டை சதமும், சஹா சதமும் அடித்து அசத்தியுள்ளனர்.

இந்திய வீரர் புஜாரா 142 ரன்களில் ஆடிக்கொண்டிருந்த போது, ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹேசில்வுட் வீசிய 'ஷாட் பிட்ச்' பந்தை விளாச முயற்சித்தார். ஆனால் பந்து பேட்டில் படாமல் விக்கெட் கீப்பர் மேத்யூ வேட்டின் கையில் சிக்கியது. விக்கெட் கீப்பரோ, பந்து வீசிய ஹேசில்வுட்டோ அவுட் கேட்டு அப்பீல் செய்யவில்லை. அதற்குள் நடுவர் கிறிஸ் கேபனி (நியூசிலாந்து) அவுட் என்பது போல் விரலை உயர்த்த தொடங்கினார். பிறகு ஆஸ்திரேலிய வீரர்கள் அப்பீல் செய்யாததால் சுதாரித்துக் கொண்ட அவர் உடனடியாக தூக்கிய விரலை அப்படியே தொப்பி மீது சொறிந்தபடி சமாளித்து விட்டார்.

அவரது செயல் விக்கெட் கிடைக்காத விரக்தியில் இருந்த ஆஸ்திரேலிய வீரர்களை திகைப்புக்குள்ளாக்கியது. அதே நேரத்தில் மற்றவர்கள் நடுவரின் காமெடியை கண்டு சிரித்து விட்டனர்.



மாத்தளை, உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் நேற்றுமுன்தினம்(19) இடம்பெற்றது. இதில் மத்திய மாகாணசபை அங்கத்தவர் எம். இப்ராகிம் அதிதியாகக் கலந்து கொண்டார். (படங்கள் - வத்துகாமம் நிருபர்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 21ST MARCH 2017